# ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி (தன்னாட்சி)

தமிழ்த்துறை

சென்னை - 600 086.




# நல்லதோர் வீணை

ஜனவரி 2019

# நல்லதோர் வீணை நிரம்பி வழிகிறது
# அதனைச் சுவைத்து மகிழ்ந்திடுவீர்


| | | |
|---|---|---|
| அணிந்துரை | – | 1–2 |
| அப்பா, அம்மா | – | 3 |
| ஆசிரியர்கள் | – | 3 |
| விடியல் உனக்காக | – | 3 |
| அன்பென்ற மழையில்... | – | 4 |
| உம் மாட்சி | – | 4 |
| சாபம் ஒரு தூபம் போல... | – | 4 |
| பாதுகாப்பான உணவு | – | 5 |
| ஆரோக்கியமான உணவு | – | 7 |
| ஆரோக்கியமான உணவு | – | 8 |
| எழுந்துவா தமிழா ! | – | 12 |
| அன்பு | – | 12 |
| என் அன்பு அம்மா | – | 13 |
| கர்மவீரர் காமராசர் | – | 14 |
| ஓய்வின்றி உழைத்தால் | – | 14 |
| தாய், மழை | – | 15 |
| அழகிய தேவதை | – | 16 |
| நெஞ்சே எழு | – | 16 |
| பாடாய்ப்படும் இயற்கை | – | 18 |
| புதைந்த விதை | – | 19 |
| மனிதம் | – | 20 |
| அம்மாவைத் தொலைத்தோம் ! | – | 21 |
| பல வேடிக்கை மனிதரைப்போல...<br>வீழ்வேனென்று நினைத்தாயோ ? | – | 22 |
| இயற்கையின் இசைபாடும் தமிழுலகம் | – | 23 |
| அகல் விளக்குடன் ஒரு பேட்டி | – | 24 |
| இன்று காந்தி இருந்திருந்தால் | – | 26 |
| சென்னையில் மழையின் விளையாட்டு | – | 27 |
| செம்மொழியின் சிறப்பு | – | 27 |
| விந்தை மாந்தர்கள்... | – | 28 |

# அணிந்துரை

**முனைவர். அ. டேனியல்**
தலைவர் & இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
இலயோலா கல்லூரி
சென்னை - 600 034.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியில் தமிழ்த்துறையும் ஒரு சிறப்பு மிக்கத் துறையாகும். மாணவிகளின் பல்வேறு தனித் திறமைகளை வெளியிட்டுள்ள தமிழ்த்துறைக்குப் பாராட்டுகள்!

தாய், தந்தை, ஆசிரியர்கள், இறைவன், இயற்கை, உணவு, ஒழுக்கநெறிகள், மனிதம், ஒருபக்க கதைகள், கட்டுரைகள் என 62 தலைப்புகளில் மாணவிகள் தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தியுள்ளார்கள். அந்த மாணவிகளுக்கு எனது பாராட்டுகள்.

"அந்தக் கடவுளும் தோற்றுப் போவான்
என் அப்பாவின் உழைப்பைக் கண்டு"
"கற்கத்துணைப் புரிந்தவன்
கண்ணாய் என்னைக் காத்தவள்"

"நீ விதை என்றால் நான் மரம்", இவை போன்று தாய் தந்தையரின் அன்பு குறித்து பத்துக்கும் மேற்பட்ட தலைப்புகளில் மாணவிகள் கவிதைப் படைத்துள்ளது போற்றுதலுக்குரியது.

அன்பென்ற மழையில், உம்மாட்சி, சாபம் போன்ற கவிதைகளின் வழி இயேசுவின் சிலுவைப்பாடுகள், முள்முடி, ஏதேன் மற்றும் கெதுசமனே தோட்டத்தின் சிறப்புகள் கிறித்துவச் சமயத்தின் சிறப்புகளையும் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆரோக்கியமான உணவு, பாதுகாப்பான உணவு முறைகள் என்ற தலைப்புகளில்,

‘நாம் உண்ணும் உணவே
யாக்கைக்கு நாம் அளிக்கும் நல்மருந்து’

திருவள்ளுவரின் ‘மருந்து’ அதிகாரக் கருத்துகளை இன்றைய உணவு முறைகளோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்.

எழுந்துவா தமிழா, செம்மொழியின் சிறப்பு என்ற தலைப்பில்

‘‘தமிழ் என்பது அடையாளம்’’

‘‘தடுக்கி விழும்போது அ, ஆ...!!!

சிரிக்கும் பொழுது இ, ஈ...!!!’’ போன்ற வரிகள் தமிழ், தமிழர் உணர்வைத் தட்டியெழுப்புகின்றன.

அகல் விளக்குடன் ஒரு பேட்டி, உப்பு மற்றும் எறும்புடன் ஒரு பேட்டி போன்ற தலைப்புகளில் அமைந்த கவிதைகள் மாணவிகளின் கற்பனைத் திறனுக்குச் தக்கச் சான்றாகும். மேலும் மனித நேயம், தன் முனைப்புச் சிந்தனைகள், மனித நேயம் காமராசர், மகாகவி ஆகியோர் குறித்த கவிதைகள் மிகவும் போற்றுதலுக்கு உரியவையாகும்.

மாணவிகளின் கற்பனைத்திறன், கவிதை பாடுபொருள்கள் எளியநடை ஆகியன இத்தொகுதியின் சிறப்புத்தன்மையாகும். ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி தமிழ்த்துறைப் போராசிரியர் பெருமக்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன், மாணவிகளுக்கும் மற்றும் பேராசிரியப் பெருமக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்பால் துறையை வழிநடத்திச் செல்லும் தமிழ்த்துறைத்தலைவர் அவர்களுக்கும் எனது பாராட்டுகள். ஆண்டுதோறும் தமிழ்த்துறை, மாணவிகளின் படைப்பாக்க திறனை வெளிக்கொணர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

## அப்பா, அம்மா

அந்தக் கடவுளும் தோற்றுப் போவார்
என் அப்பாவின் உழைப்பைக் கண்டு
அந்த வலியும் பறந்து போகும்
என் அம்மாவின் பாசத்தைக் கண்டு
ஏழையாய் தானே பிறந்தேன் என்னை
வாழ வைத்தார்கள் ராணியாக
எந்தக் கஷ்டமும் மிரண்டு போகும்
என் பெற்றோர்களைக் கண்டு.

## ஆசிரியர்கள்

இவ்வுலகில் எங்களுக்கு அறிவொளி ஊட்டினார்கள்
எங்களைச் செதுக்கும் சிற்பியாகவும் மாறினார்கள்
எங்களுக்கான நல்ல எதிர்காலத்தையும் காட்டினார்கள்
சில நேரங்களில் நல்ல தோழியாகவும் பழகுகிறார்கள்
வானத்தில் ஜொலிக்கும் நட்சத்திரங்களாக மாற்றினார்கள்
உங்களைப் பார்த்தால் மிகவும் வியப்பாக இருக்கிறது
உங்களைப் பற்றி எழுத கூட என் பேனா நடுங்குகிறது
உம்மிடம் படித்த மாணவர்கள் என்று சொல்லுவோம் பெருமையாக
அன்று வருவீர்கள் நீங்கள் எங்கள் உதட்டின் புன்னகையாக...

**- ச. மரிய ஷியாம்ளா**
முதலாமாண்டு இணைப்புப் பாடம் (Bridge Course)

## விடியல் உனக்காக

விதைக்குள் உறங்கும் ஆலமரமே - விழித்தெழு
மலைக்குள் உறங்கும் சிற்பமே - விழித்தெழு
பூவினுள் உறங்கும் வாசமே - விழித்தெழு
சிப்பிக்குள் உறங்கும் முத்தே - விழித்தெழு
மேகங்களில் உறங்கும் மழையே - விழித்தெழு
சூரியனில் உறங்கும் சுடர்கதிரே - விழித்தெழு
கடலில் உறங்கும் அலையே - விழித்தெழு
கருவினில் உறங்கும் மானிடா - விழித்தெழு
கைகளில் உறங்கும் கலை வாசமே - விழித்தெழு
மனிதனில் உறங்கும் மனமே - விழித்தெழு
மனதினில் உறங்கும் புதுயுகமே - விழித்தெழு
விழித்தெழு! விழித்தெழு! - வசந்தம்
உன் வாழ்வில் வீசட்டும் சாந்தமாக
என்றும் விடியல் உனக்காக.

## அன்பென்ற மழையில்...

அன்பென்ற மழையில் நனைந்தேன்
ஆருயிராம் இறையைத் தொழுதேன்
இன்னிசை பாடி இணைந்தேன்
ஈடேற்றம் பெற ஏங்கினேன்
உள்ளத்தில் உறைவிடமாய் உம்மை
ஊக்கமுற ஏற்று என்னில்
எல்லாமுமாய்ச் செயல்பட என்றும்
ஏந்திட்டேன் கரங்களில் தீபத்தை
ஐயமின்றி வாழ்வின் நடை தொடர
ஒளியாம் உம்மைப் போர்வையாய்
ஓடம் அதனைத் துழைந்து
ஔடதமாய்த் திடம் பெற்றெழுந்தேன்
அஃதே நனைந்தேன் அன்பென்ற மழையில்

## உம் மாட்சி

மேகங்களின் நடுவில் விண்மீனே
பெருவிழா வேளையில் சந்திரனே
உன்னதரின் பேரொளியாம் கதிரவனே
ஏழுபெரும் நிறம் கொண்ட வானவில்லே
குளிர் நிறைக் காலத்தின் பனிநீரே
தூய்மை நிறைக் கொடியாம் லில்லி மலரே
லெபனானில் முளைத்தெழுந்த பசுமையே
தூபத்தின் புகையில் நின்றுயரும் வாசனையே
ரத்தினங்கள் நிறைப் பாத்திரப் பெருமையே
கனிகள் நிறைக் காட்சியுள்ள ஒலிவு மரமே
மேகத்தோடு உறவாடும் தேவதாருவே
வான்வெளி நிரம்பும் நீலநிறப் போர்வையே
மேகத்தேரில் உலாவரும் நின் காட்சி
வாழ்த்திடுமே இவ்வுலகம் உம் மாட்சி!

## சாபம் ஒரு தூபம் போல...

கீழ்ப்படியாமையால் தோல்வியானதே ஏதேன் தோட்டம் - அன்று
கீழ்ப்படிதலால் வெற்றியானதே கெத்ஸமனி - இன்று
அலகை வருடியதே ஏவாளின் தலையை - அன்று

அலகையின் தலை மிதித்தாளே மரியம் - இன்று
பிள்ளைப்பேறு வேதனை சாபமானதே - அன்று
பிள்ளைப்பேறு வேதனையில் ரக்ஷகன் வந்தாரே - இன்று
பாபம் மூலம் மண் சபிக்கப்பட்டதே - அன்று
சிலுவை நாதன் மண்ணை முத்தமிட்டாரே - இன்று
நெற்றி வியர்வை சிந்த கிடைத்த உணவே - அன்று
நெற்றி இரத்தம் சிந்தித் தந்தாரே உணவு - இன்று
மண் முள்ளும் முள்செடியும் சாபமானதே - அன்று
சிலுவை நாதன் முள்ளை முடியாகச் சூடினாரே - இன்று
தாவரங்கள் உணவாகட்டும் என்றாரே - அன்று
காடி நீரைக் குடித்து எல்லாம் நிறைத்தாரே - இன்று
உயிரின் மரத்தை விலக்கினாரே - அன்று
உயிர் தந்து உயிராய் வாழ்கிறாரே - இன்று
சாபம் எல்லாம் மாறியதே - என்றும்

ஒரு தூபம் போல.....

**- அருட்சகோதரி ஜெனிஃபர்**
மூன்றாமாண்டு விலங்கியல்

# பாதுகாப்பான உணவு

**முன்னுரை :-**

ஏறத்தாழ இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பாகத் தமிழர்கள் 'உணவு' தேவை என்பதனை வலியுறுத்தவில்லை. ஆனால், "உணவு" என்ற சொல்லுக்குள் நிறைய பொருள் இருப்பதனைக் கண்டறிந்தனர். "கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி மக்கள்" வாழ்ந்த தமிழ்நாட்டில் இருந்துதான் நாகரிகமாக இருந்தாலும் சரி; உணவுக் கலாச்சாரமாக இருந்தாலும் சரி; உலகம் முழுக்கப் பரவச் செய்தவர்கள் தமிழர்களே என்பதற்கு ஆதாரங்கள் கண்டறியபட்டன.

**சங்ககால மக்களின் உணவு முறை :**

நம் மூதாதையர்கள் காலத்திலிருந்து நாம் தரையில் அமர்ந்து உணவு உண்ணும் முறை இருந்து வருகிறது. ஏனெனில் தரையில் நாம் சம்மணம் போட்டு உண்ணும் போது நமது தசைகள், முட்டி, எலும்புகள் ஆகியவற்றிற்குப் பலம் கிடைக்கும் என்பது அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மூலமாகக் கண்டறியப்பட்ட உண்மையாகும். இப்போது நம் பாரதி வழி நின்றறிந்தால் "தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை

அழித்திடுவோம்'' என்ற கூற்றின்படி ஒருவர் வாழ்வில் உணவு என்பது எவ்வளவு இன்றியமையாததாக இருக்கிறது என்பதனை அறியலாம்.

சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள், சான்றோர் அனைவரின் கூற்றும் ஒன்றே ஆகும். ''நாம் அன்றாடம் உண்ணும் உணவு மருந்தாக வேண்டும்; உண்ணும் மருந்தும் உணவாக வேண்டும்'' என்பது தான்.

பழங்காலத்தில் ''சித்த மருத்துவம்'' என்பது மிகவும் சிறந்து விளங்கிய மருத்துவம். அதில் தயாரிக்கும் ஒவ்வொரு மருந்தும் நாம் அன்றாடம் பயன்படுத்தும் பழங்கள், காய்கறிகள், இலைகள், இயற்கை மற்றும் மூலிகை வேர்களில் இருந்துதான் தயாரிக்கப்படுகிறது. பழங்கள், காய்கறிகளை நாம் முதன்மை பாதுகாப்பான உணவாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

**உணவு முறையில் மாற்றம் :-**

இன்றைய வாழ்வில் நாம் காலை உணவினை மறந்து செல்லும் அளவிற்கு வேகமாகப் போய்க் கொண்டு இருக்கிறோம். நீங்களே சிந்தனை செய்துபாருங்கள் இன்று எவ்வளவு குடும்பங்கள் ஒன்றாக அமர்ந்து உணவு உண்கிறோம். அதுபோகட்டும் நம் உணவு என்பதனைக் கடமையாக உண்பவர்கள் இருக்கிறார்கள். அதிலும் பிளாஸ்டிக் தட்டினை உபயோகப்படுத்தி உண்கிறார்கள். நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும் ''வாழை வாழ வழி வகுக்கும்'' என்று.

இன்றைய உணவு தயாரிக்கும் முறையே சீரழிந்து இருக்கின்றது. விற்பனைக்காக விற்பனையாளர்கள் செய்யும் கலப்படங்கள் மக்களைப் பேரழிவிற்குத் தள்ளுகின்றன. முன்னாளில் விவசாயிகள் எந்த விதமான ரசாயனங்களையும் கலக்காமல் உணவு தயாரித்தனர். ஆனால் இன்று ரசாயனம் கலக்காத உணவே இல்லை என்ற நிலையில் தள்ளப்பட்டு இருக்கிறோம்.

**நூல்களில் கூறப்படும் உணவு:**

முதலில் நான் புகழ்பெற்ற ''வள்ளுவனைப் பெற்றதால்...'' எனும் பெருமைக்குரியவரின் வாய்மையில் நின்று வருகிறேன்.

* அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.

* மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு

* திரிகடுகம் - சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று மருந்துப் பொருள்களைச் சேர்த்து உண்டால் உடலுக்குக் கிடைக்கும் பலனை எடுத்துரைக்கிறது.

* ''ஏலாதி'' நூலின் வழி நின்றால் ''சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், ஏலம், சிறுநாவற்பூ'' ஆகிய ஆறு பொருள்களுக்கு உள்ள தன்மை உடலைக் காக்கும் என்பதனை வலியுறுத்துகின்றது.

* சிறுபஞ்சமூலம் : கண்டங்கத்திரி, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி, சிறுவழுதுணைகளால் ஆகிய ஒரு மருந்துக்கு ''சிறுபஞ்சமூலம்'' என்பது பெயர்.

**துரித உணவுகளின் விளைவு :-**

இன்று மக்கள் நோயால் அவதிப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டதற்குக் காரணம் ''உணவு'' என்று கூறுவதை விட ''துரித உணவு'' என்று கூறலாம்.

ஏறத்தாழ 500 குழந்தைகளுக்கும் மேல் நாம் கண்ணால் எதனைப் பார்க்கிறோமோ அதனையே நல்ல உணவு என்றும், பார்ப்பதற்குப் புதிதாகத் தெரியும் உணவுகளையும் தான் நல்ல உணவுகள் என்றும் நம்புகிறார்கள். அவற்றின் விளைவுகளை வெளிப்படுத்தும் வகையில்தான் நோய்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

''தன் காயம் போக்க வெங்காயம் போதும்'' என்பது என் மொழி. எனவே நாம் இத்தகைய அசுத்த உணவுகளையும், துரித உணவுகளையும் யாராவது தடுக்க மாட்டார்களா? என்று நினைப்பதை விட்டு முதல் முயற்சியை நாம் எடுப்பது நல்முயற்சியாகும். **'உணவு'** என்னும் வார்த்தைக்கு நான் அறிந்து கொண்ட அர்த்தம் **உ**ன்னதமான எண்**ண**த்தில் வரும் உற**வு.**

**- சீ. சுவாதி**
முதலாமாண்டு கணிதவியல்

# ஆரோக்கியமான உணவு

**முன்னுரை :-**

உடல் வலிமைக்காகவும், வளர்ச்சிக்காகவும் நாம் தினமும் உணவை நாடுகிறோம். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவு. எனவே, ஆரோக்கியம் வாய்ந்த, பாதுகாப்பான உணவைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம் :-**

நமது உடல் நோய் பெற்றால், வலிமை குன்றி தோற்றம் இழந்து விடுவோம். இதற்கு காரணம் பல உண்டு. அவற்றுள் முக்கியமானவை விரைவு உணவுகள் (ஜங்கு புட், பாஸ்ட் புட்). அவற்றை விற்பதன் நோக்கம் பணம், சுவை மட்டுமே. குறைந்த விலை என்று எண்ணி மக்கள் மேலும் பணத்தைச் செலவிடுகிறார்கள். பெரியவர்கள் மட்டுமின்றி சிறு

குழந்தைகளும் இதில் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். புரோட்டீன் சத்து குன்றியதால் குவாஷியோகர் மராஸ்மஸ் என்னும் நோய் உருவாகிறது. பெண்களுக்குக் கற்பப்பை வலுவிழந்து விடுகிறது. மேலும் பல பிரச்சனைகள் இதனால் வளர்கிறது. நாவை அடக்க வேண்டும் என்றார் வள்ளுவர். ஆம், ஏனென்றால் ருசி அறிந்த நா, இன்சொல் பேசுவதைக் காட்டிலும், நோயுற்ற உணவையே வேண்டுகிறது.

**உணவின்றி தவிப்பு:-**

பத்து இலட்சம் கோடி மக்கள் வாழும் உலகில், பணம் இன்றி பட்டினியில் தவிக்கும் மக்கள் பலர் உள்ளனர். பணம், உணவு ஆகியவற்றைக் கொண்டவர் உணவை மீதிவைத்து, குப்பையில் கொட்டுகிறார்கள் ‘‘ஏழ்மை உள்ள பூமியில், தாய்மை பார்ப்பதுண்டா…?’’

‘‘இல்லை’’ எனவே, உணவைப் பகிர்வோம் வீணாக்காமல்.

**ஆரோக்கியமான உணவு:-**

ஆரோக்கியமான வாழ்க்கை வாழ, ஆரோக்கியமான உணவை உண்ண வேண்டும். தினமும் காலையில் எழுந்த உடன் ஒரு குவளை தண்ணீர் பருகவேண்டும். காலை உணவை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள் முடித்தல் வேண்டும். மதிய உணவை 1.30 மணிக்குள் முடித்தல் நன்று. வயிறு நிறைய உண்ணக் கூடாது. கால் வயிறு உணவு, கால் வயிறு தண்ணீர் மற்றும் மோர் இருத்தல் வேண்டும். சீரணமாகா உணவு சற்றும் பயனில்லை. இரவும் மணி 8.00 முதல் 9.00 க்குள் முடித்தல் வேண்டும். தினமும், உணவுக்குப் பின் மாலையில் ஒரு பழம் எடுத்துக்கொள்ள வேண்டும். இரவு உறங்கும் முன் பால் குடிக்க வேண்டும். பாலில் கால்சியம் உள்ளது. காலையில் நமது உடலைச் சூரிய ஒளியில் காட்ட வேண்டும். ஏனென்றால் அதில் விட்டமின் - டி என்னும் சத்து உள்ளது.

**முடிவுரை:-**

உட்கொள்ளும் அளவிற்கு உடல் வேலை செய்ய வேண்டும். சோம்பல் என்னும் எதிரியின் பார்வை பட்டால், உடல் வலிமை குன்றிவிடும். காலையில் உடற்பயிற்சி செய்தல் நன்று.

**ஓடினால் நோய் நம்மை விட்டு ஓடும் ஆனால்…**
**எப்பொழுதும் படுத்துக் கிடந்தால் நோய் நம்மீது படுத்துக் கொள்ளும்.**

எனவே, சோம்பல் கொள்ளாது, உழைத்து, உண்டு வாழ வேண்டும்.

**- எஸ். வனிதா**
முதலாமாண்டு தாவரவியல்

# ஆரோக்கியமான உணவு

**முன்னுரை:-**

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை நாம் காற்றைச் சுவாசிப்பது போல பல இடங்களில் பலவாறாகக் கேட்டிருக்கின்றோம். ஆனால் இது கேள்வி நிலையில் மட்டும் இருக்கின்றதே தவிர செயல் வடிவம் பெறவில்லை. காரணம், நோய்களை எண்ணற்ற செல்வங்களைக் கொடுத்துதான் நாம் வாங்குகின்றோம்.

**"நாம் உண்ணும் உணவே**
**யாக்கைக்கு நாமளிக்கும் நல் மருந்து"**

நல்மருந்தாம் உணவு - ஆரோக்கியமான வலுவளிக்கும் உணவு முறையாக இருந்தால் வேறு ஒரு நல்மருந்து இவ்வுலகில் இல்லை.

**நல்ல உணவே - நல் மருந்து :**

**"நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்"** - திருவள்ளுவர்.

உலகம் போற்றும் புகழ்பெற்ற திருவள்ளுவர் தம் திருக்குறளில் **மருந்து** எனும் அதிகாரத்தில் உணவே மருந்து என்பதைச் சிறப்பாக விளக்கியுள்ளார். "அளவறிந்து உண்பான் உயிர்காப்பான்" என்ற வாக்கிற்கிணங்க கிடைப்பதனைத்தையும் காண்பதனைத்தையும் எடுத்துண்பவன் நோயை விலை கொடுத்து வாங்குகின்றான்.

அறுசுவை உணவே - நல்மருந்து. இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு இவை ஆறு வகையும் சரிசம விகித உணவு எனப்படுகின்றன. தினந்தோறும் ஒருவேளை உணவிலாவது இவ்வகை அறுசுவையும் இடம்பெற்றால் அவர் வாழ்க்கை என்றும் நலமே! இவ்வாறு செய்தால்; "வாழ்க பல்லாண்டு" என்று கூறுவோரின் ஆசி நம்மை வந்து சேரும்.

**உணவின் சிறப்பியல்புகள்:**

"உண்ணும் உணவு ருசிக்காக
உண்டால் அது தீங்கைத் தரும்
பசிக்காக உண்டால் - அது நிம்மதியைத் தரும்

பசிக்காகவும் ருசிக்காகவும் சேர்த்து உண்டால் - அது நல்வாழ்வைத் தரும்"

முற்காலத்தில் மலைமுடுக்குகளிலும் காடு, சமவெளி நிலைகளிலும் வாழ்ந்த மக்கள் வலிமையைப் பெற்றிருந்தனர் காரணம் என்னவென்றால்,

* சாமை
* கேழ்வரகு

* திணை
* குதிரை வாலி
* எள்ளு
* காராமணி

என மேலே குறிப்பிட்ட தானியங்களை உணவாக உட்கொண்டனர். இவ்வகைத் தானியங்களில் மிகுந்த சத்து அடங்கியிருக்கின்றது.

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்"** - திருவள்ளுவர்

மருந்தில்லாமல் வாழ்வில்லை என்று கூறும் மனிதர்களிடையில் நாம் தைரியமாகக் கூறலாம் இந்தத் புரோட்டின் எனப்படும் புரதசத்து, கொழுப்புச்சத்து. நார்ச்சத்து, நீர்ச்சத்து, தனிமங்கள், வைட்டமின்கள், கனிமங்கள் இவையெல்லாம் தானியங்களில் அடங்கியிருக்கின்றன என்று அன்று பச்சிலைகளும் தானியங்களும் கிழங்கு வகைகளையும் முற்றிலும் விரும்பி உண்டதனால், வலுவாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தனர்.

இன்று பாஸ்ட்புட் எனப்படும் வேதியல் முறையில் உண்டாக்குகின்ற உணவு வகைகளையே குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிச் சாப்பிடுகின்றனர். இவ்வாறு போகின்றார்களெனில் காரணம் வேறுயாருமில்லை பாரம்பரியங்களைக் கைமாற்றிய பெற்றோர்களே காரணம்.

**உணவே உயிர்:-**

சராசரி விகிதத்தில் பார்க்கும் போது செயற்கை உணவைப் பின்பற்றுபவர்களே அதிகமாக உள்ளனர். ஒரு சிலர் மாற்றுமுறையைப் பின்பற்றினால் அவர்களைத் தரம் தாழ்ந்தவர்களாகவே எண்ணுகின்றோம்; ஆனால் அவர்களுக்கே நீடிய ஆயுள் கிடைக்கும் இது உறுதி.

கோதுமை, சாமை, கேழ்வரகு, பயறுவகைகளில் கார்போஹைடிரேட்டுகள் நிறைந்துள்ளன. செயற்கையான உணவு நல்ல கொழுப்புச் சத்துக்களைப் பாதித்து, கெட்ட கொழுப்புச் சத்துக்களைக் கொடுக்கின்றன.

**நல்ல கொழுப்புச்சத்து**

* மீன்கள்
* பால்
* தேங்காய்
* வெண்ணெய்
* நெய்

**கெட்ட கொழுப்புச்சத்து**

* ஐஸ்க்ரீம்

* பர்கர்
* பீஸா
* சமோசா

காரட், முள்ளங்கி, பீட்ரூட், தக்காளி, புடலங்காய், வெண்டைக்காய், பீன்ஸ், கத்தரிக்காய், சுரைக்காய் போன்ற காய்கறி வகைகள் உணவு ஊட்ட முறையை சக்திப்படுத்துகின்றன.

**ஆரோக்கியமான உணவுகள்**

* கம்பக்கூழ்
* தினைக் கஞ்சி
* கோதுமை ரொட்டி
* அரிசி கஞ்சி
* காய்கறிகளைக் கொதிக்க வைத்த சூப்பு
* சாமை களி

இவையனைத்தும் சரிவிகித சத்துநிறைந்த சக்தி மிகுந்த உணவுகளாகும்.

ஆம் திருவள்ளுவர் இவ்வாறு கூறுகின்றார்; அவ்வாறு கூறுகின்றார் என்றெல்லாம் எழுதும் போதும் பேசும் போதும் மற்றுள்ளவர்களுக்கு அறிவுரை கூறப்படுகிறதே தவிர; நான் ஏன் இதை பின்பற்றக்கூடாது; பின்பற்றி என் வாழ்வை ஏன் வளமாக்கக் கூடாது என்ற வினா என்னுள் எழுந்துள்ளது.

**“உணவாக உயிராக வருகின்ற**
**சரிசமவிகித உணவே - நலமான உணவு”**

**முடிவுரை :-**

**“உடல் காக்க உயிர் வேண்டும்**
**உயிர் காக்க உணவு வேண்டும்**
**உணவைக் காக்க நீ வேண்டும்**
**உன்னைக் காக்க உணவு வேண்டும்**

**என்பதை மட்டும் மறந்திடாதே மனிதா!”** என்று கூறும் பாடல் வரிகளுக்கு மறுமொழி அளிப்போம். இல்லையென்றால் புழு கூறும் செய்திதான் மிச்சம்.

**புழு கூறுகிறது :** நீங்கள் மண்ணுக்கு வரும்போது நாங்கள் உண்கின்றோம். வேதியல் உணவு முறையில் நீங்கள் எங்களை உண்கின்றீர்கள். ஆதலால் இப்போதாவது அறிந்திடுங்கள் இயற்கை உணவே - ஆரோக்கிய உணவு!

**- அருட்சகோதரி ஜெனிபர்**
மூன்றாமாண்டு விலங்கியல்

# எழுந்துவா தமிழா!

தமிழன் என்று சொல்லுங்கள்
தலைநிமிர்ந்து செல்லுங்கள்
தாய்மொழியைப் போற்றுங்கள்
பிறமொழியை ஓட்டுங்கள்
நதிகளைக் கூட்டுங்கள் - நல்
வேளாண்மை ஏற்றுங்கள்
காளையைக் காட்டுங்கள்
பீட்டாவை ஓட்டுங்கள்
வர்தாவில் சிக்கியும்
தூத்துக்குடியை மீட்டார்கள்.
தமிழ் என்பது அடையாளம்
தமிழைப் போற்ற
தரணியிலே புயல் போல்
எழுந்துவா தமிழா
இவ்வுலகம் உய்ய!

**- ஜெ. ஹர்ஷினி**
முதலாமாண்டு வணிகவியல்

# அன்பு

குளிர்ந்த காற்று வீசியது. தெளிந்த நீரோடை ஓடியது. பச்சைப் புடவை கட்டிய மணமகள் போல் வளமையும் இளமையும் ததும்ப காட்சியளித்தாள் இயற்கை அன்னை. மனிதர்களும், மதங்களும், மகிழுந்துகளின் மாசும், மறியல்களும், வஞ்சம் தீர்த்துக் கொள்ள எண்ணும் மனங்களும் இல்லாத அந்தக் காடு ஆப்பிரிக்காவின் மத்தியப் பகுதியில் அமைதியாக அமைந்திருந்தது.

களுக்... களுக்... களுக்...

என்ன அந்தச் சத்தம்? தாயும் சேயுமாய் இரண்டு அழகிய புள்ளி மான்கள் கதிரவனின் கதிர்களால் ஏற்பட்ட தாகத்தைத் தணித்துக்கொள்ள தங்குதடையின்றி ஓடிக்கொண்டிருந்த அந்தத் தெளிந்த நீரோடையில் இருந்த குளிர்ந்த நீரைப் பருகிக் கொண்டிருந்தன. திடீரென மனதில் ஏதோ ஒரு பயம், கலக்கம், மிரட்சி (சொல்லப்போனால் ஒரு இன்ஸ்டிங்ட், ஒரு இன்ட்யூஷன்) திரும்பிப் பார்த்தால் தூரத்தில் இருந்த அடர்ந்த புதரின் இடையே இரண்டு தீப்பிழம்புகளைப் போல் காட்சியளித்தன இரண்டு கண்கள். அந்தத் தீ தங்கள் வாழ்வைச் சூறையாட காத்திருப்பதை அவற்றின் கண்களில் தெரிந்த பசியும் பதற்றமும் உணர்த்தின.

உயிருக்காக ஓட்டம் எடுத்தன தாயும் சேயும். தன் இரைகள் தப்பி ஓடுவதைக் கண்டு புதரிலிருந்து புயல் போல் பாய்ந்து துரத்தத் துவங்கியது புலி.

**உயிருக்கான வேட்கை வேகத்தை அளிக்குமா?**
**பசிக்கான வேட்கை வேகத்தை அளிக்குமா?**
**போட்டி சூடுபிடித்தது. ஒரு கட்டத்தில் சேய்**
**சோர்வடைவதைக் கண்டு தாய் நின்றது.**

தன் மருண்ட கண்களால் தன் சேயின் முகத்தைப் பார்த்துவிட்டுக் கண்களாலேயே தப்பிக்குமாறு உணர்த்திவிட்டு, திடீரென்று சிலை போல் நின்றது தாய். தாயின் எண்ணத்தை அறிந்த சேய் கண்ணீர் காற்றில் கலக்க ஓடியது. துரத்திய புலியோ கிடைத்தவரை லாபம் என்று தாய் மீது பாய்ந்தது. தன் சேய் செல்லும் திசையை ஒரு முறை நோக்கிவிட்டு இந்த உலகிற்கு விடையளிக்க கண்களை இறுக மூடிக்கொண்டது (தாய்) அந்த விலங்கு.

'அன்பு' என்னும் சொல்லை நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் பேசும் மனிதர்களுக்கு மொழியறியா அந்த வாயில்லா விலங்கு அன்பிற்கான அர்த்தத்தை அழகாக உணர்த்தியது.

**- சி.பூஜா**
முதலாமாண்டு சமூகவியல்

# என் அன்பு அம்மா

அன்பு மனம் உள்ளவள்
அருள் உள்ளம் படைத்தவள்
இரக்க குணம் கொண்டவள்
பண்பின் சிகரம் ஆனவள்

கற்கத் துணை புரிந்தவள்
கண்ணாய் என்னைக் காத்தவள்
ஊக்கம் நாளும் தந்தவள்
உயிராய் அணைத்துக் கொண்டவள்

பாச மழையைப் பொழிந்தவள்
பரிவைக் காட்டிக் களித்தவள்
உண்ணும் அழகை ரசித்தவள்
உச்சி முகர்ந்து மகிழ்ந்தவள்

**- ஜெ.ஜெபிஷா**
முதலாமாண்டு வணிகவியல்

# கர்மவீரர் காமராசர்

கர்மவீரர் காமராசர்
　　காந்திவழியில் வந்தாரு
மக்களோடு மக்களாகி
　　நல்லஆட்சி தந்தாரு
பட்டித்தொட்டி பிள்ளைகள்படிக்க
　　பள்ளிகள் கட்டித் தந்தாரு
படிக்கும் பிள்ளையின் பசியைப் போக்க
　　மதிய உணவும் தந்தாரு
கோரிக்கைவெச்சா ஆளபார்த்து
　　'ஆகட்டும் பார்க்கலாம்' என்பாரு
கோடிக்கணக்கான தமிழர்வாழ
　　அணைகள் கட்டித்தந்தாரு
விருதுநகரில் பிறந்தாரு
　　நம்மை விருது வாங்கச் சொன்னாரு
நல்லபேரைத் தாங்கி
　　ஊருக்கு உழைக்கச் சொன்னாரு

**- பூஜா.சி.**
முதலாமாண்டு சமூகவியல்

# ஓய்வின்றி உழைத்தால்

ஒரு ஊரில் ராமு மற்றும் ரவி வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் இருவரும் நண்பர்கள். இவர்களுள் ராமு மிகவும் பணக்காரன் மற்றும் ரவி ஒரு ஏழை வீட்டில் பிறந்தவன். ரவி தன் தங்கைக்கு தான் சம்பாதித்துத் திருமணம் செய்துகொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஏனென்றால் அவன் அப்பாவிற்கு 78 வயது ஆயிற்று இனிமேல் அப்பாவால் சம்பாரிக்க முடியாது என்பதால். அதற்காக ரவி இரவும், பகலும் இரு வேலை செய்து வருகின்றான். அவன் உழைப்பிற்கு அளவே இல்லாமல் ஆயிற்று. ஆனால் நண்பன் ராமு ஒரு வேலையும் செய்வதில்லை. வீட்டில் மட்டும் தன் காலத்தை ஓட்டுகிறான். அவன் ரவியை அழைத்து வெளியே செல்ல நினைப்பான். ஆனால் ரவி அவனுடன் செல்லாமல் தனக்கு வேலை இருக்கிறது என்று சொல்லி விடுவான். அவனுடைய வேலைக்குக் கிடைக்கும் ஊதியம் மிகவும் குறைந்தது தான். அதனால் இரவும் பகலும் உழைத்து வருகின்றான்.

ரவியின் தங்கைக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்றால் குறைந்தது 1 லட்சம் ஆவது தேவைப்படும் என்று அம்மா ரவியிடம் கூறினாள். ரவிக்கு ஒரு பழக்கம் உண்டு. தான் செய்த வேலைக்குக் கொடுத்த சம்பளத்தை வங்கியில் கொடுத்து தன் பெயரில் சேமித்து வருவான். ரவியின் தங்கைக்குத் திருமணம் செய்ய 3 மாதங்கள் மட்டுமே உள்ளது. தான் எப்படி பணத்தை அதிக அளவில் சேமிப்பது என்று நினைத்துக் கொண்டு உறங்கி விடுவான் தினமும்.

சில மாதங்களுக்குப் பிறகு அவன் வங்கியில் சேமித்த பணத்தை எடுக்கச் சென்றான். அவன் சிறுகச் சிறுக பணத்தைச் சேமித்ததால் இப்பொழுது வங்கியில் அவனுக்கு 1.5 லட்சம் இருந்தது.

ரவி அதைக் கேட்டவுடன் மிகவும் சந்தோஷம் அடைந்தான். தன் தங்கைக்குத் திருமணம் நடக்க இருக்கிறது என்றதால் அவன் பணத்தை வங்கியில் இருந்து எடுத்து வீட்டிற்குத் திரும்பினான்.

அவன் தன் தங்கையின் திருமணத்தை நல்லபடியாக நடத்த வேண்டும். அவர்கள் ஏழை என்று நினைத்த அனைவருக்கும் ஆச்சரியம் அடையும்படி திருமணம் செய்ய வேண்டும் என்று நினைத்து அதில் வெற்றியும் அடைந்து விட்டான்.

ரவி தான் நினைத்ததை முடித்துவிட்டான் என்று சந்தோஷம் அடைந்தான். இவை அனைத்தும் அவன் ஓய்வின்றி உழைத்ததால், இல்லையென்றால் இப்படி ஒரு திருமணம் செய்து இருக்க முடியாது.

**- க.சந்தோஷி**
முதலாமாண்டு வணிகவியல்

# தாய்

நீ விதை என்றால் நான் மரம்
நீ மரம் என்றால் நான் கனி
நீ கனி என்றால் நான் சுவை
நீ நிலவு என்றால் நான் ஒளி
நீ கடல் என்றால் நான் சிப்பி
நீ சிப்பி என்றால் நான் முத்து
நீ முத்து என்றால் நான் உன் சொத்து
இதில் ஒன்றில்லாமல் ஒன்றில்லை
நீ இல்லாமல் நான் இல்லை தாயே!

# மழை

கருக்கும் மேகங்கள்
தோகை விரித்தாடும் மயில்கள்
கூடு நோக்கி குயில்கள்
அமைதி காக்கும் மரங்கள்
வானம் நோக்கி கண்கள்
பூமி நோக்கி மழைத்துளிகள்
தழைத்து வளரும் பயிர்கள்
மகிழ்ச்சியில் நனையும் விவசாயிகள்...

**- சலோமி.சி**
முதலாமாண்டு வணிகவியல்

## அழகிய தேவதை

எனக்காக உன் உடலில்
ஓர் இடத்தைத் தந்தவள் நீ

நான் உலகிற்கு வர, பல
வலிகளையும் சுகமாய்ச் சுமந்தவள் நீ

என் பசி போக்க
உன் உதிரத்தைப் பாலாக்கியவள் நீ

என்னை உயர்த்துவதற்காக
தன்னைத் தானே தாழ்த்திக்கொண்டவள் நீ

நானோ விருந்து உண்ண
பழையதை உண்டவள் நீ

துன்பங்கள் பலசுமந்தும் எனக்காக
சிரிப்பினைப் பூத்தவள் நீ

ஒரு வரியில் எனக்காகக் கடவுள் அனுப்பிய
அழகிய தேவதை நீ.

**- ஏ. தீபிகா**
முதலாமாண்டு வணிகவியல்

## நெஞ்சே எழு

அதர்மங்கள் அரங்கேறும் போது
நமக்கேன் வம்பென்றில்லாமல்
அதட்டிக் குரலுயர்த்த
என் நெஞ்சே எழுந்து நில்!

ஆட்சி மாற்ற நிகழ்வின் போது
யார் ஆள வேண்டும்
நேரிய தலைவனைத் தெரிந்தெடுக்க
என் நெஞ்சே எழுந்து நில்!

உரிமைகள் மறுக்கப்படும் போது
மௌனிப்பதே விதியென்றில்லாமல்
உரியவரின் உரிமை காக்க
என் நெஞ்சே எழுந்து நில்!

பேரிடர் மாந்தரைத் தாக்கும் போது
எம்மவரோ அவரெனப் பிரித் தறியாது
பேரா தரவுடன் துயர் துடைக்க
என் நெஞ்சே எழுந்து நில்!

இலக்கற்ற இழிமாந்தர் பெருகியதால்
மனிதம் மடிந்து போனதே
மடிந்ததை மீட்டெடுத்து நிலைநாட்ட
என் நெஞ்சே எழுந்துநில்!

சுற்றுச் சூழல் மாசடையுதே
ஆற்று நீரும் நஞ்சாகுதே
சூழல் காக்கப் பணியாற்ற
என் நெஞ்சே எழுந்து நில்!

நெகிழி படுத்தும் பாடு
நெஞ்சம் பதறச் செய்யுதே
மாற்று வழி தேடிட
என் நெஞ்சே எழுந்து நில்!

நாட்டில் வன்மம் பெருகுதே
வீட்டில் உறவு சுருங்குதே
மாந்தர் மனம் மாற்றிட
என் நெஞ்சே எழுந்து நில்!

பெண்ணியக் காவலரானோர்
கண்ணியமிழந்து போனார்
சீரிய சிந்தை உருவாக்கிட
என் நெஞ்சே எழுந்து நில்!

ஊழல் தலைவிரித்தாடுது
வீணர் மிகுந்து போனதால்
நேர்மை பேணிக் காத்திட
என் நெஞ்சே எழுந்து நில்!

என்றென்றும் நிமிர்ந்து நில்!
எது வரினும் துணிந்து நில்!
உண்மையுடன் இணைந்து நில்!
உறுதியுடன் உயர்ந்து நில்!

**- ஜோ. மேட்லின் ப்ரசென்ஷியா**
இரண்டாமாண்டு கணிதவியல்

# பாடாய்ப்படும் இயற்கை

இயற்கையே!
உன்னைப் பல கவிஞர் பாடினர்
அன்னையாய், தோழியாய், தெய்வமாய், காதலியாய்...
நான் செய்த பாவம்
உன்னைப் பாடுகிறேன்
"பாடாய்ப்படும் இயற்கை" யென்று
பஞ்சபூதங்கள் மட்டுமா
உன் சொந்தம்?
குழந்தையின் சிரிப்பு
அன்னையின் கண்ணீர்
பெண்ணின் நாணம்
அனைத்தும் இயற்கையென்பேன்.

மெய் பொய்யானது அம்மா!
"நீரின்றி அமையாது உலகு"
என்பதனை உணர்ந்தவர்கள்...
"நீ-இன்றி அமையாது உலகு"
என்பதனை உணரவில்லை
மனிதனுக்கு உரித்தான மனிதம்
இன்று மனிதன் மறந்தான், துறந்தான்
ஆனால் இயற்கை நீயோ!
மண்ணிலிருந்து மரத்தையும்
விண்ணிலிருந்து மழையையும் தருகின்றாய்

மானுடா! உனக்கு ஓர் எச்சரிக்கை
மாறிவிடு!
எதிர்த்து நின்றால் அடித்துச்செல்வாள்
வெள்ளமாய்...
அனைத்து நின்றால் அடங்கிப்போவாள்
அணையாய்...
அழிக்க நினைக்கும் செயற்கையை மறந்திடு
அளிக்க நினைக்கும் இயற்கையை அணைத்திடு...

"இயற்கையை
இயற்கை எய்தவிடமாட்டோம்!"
எனச் சூளுரைப்போம்...
இயற்கையோடு இணைந்திருப்போம்!

**- கிரு. கிருத்திகா**
இரண்டாமாண்டு வரலாறு மற்றும் சுற்றுலாவியல்

# புதைந்த விதை

பாடசாலை பருவப் பெண் - அவளை
பாசத்துடன் தடவும் பாசாங்குடன் - ஆசான்!
அவள் மேனியில் தம் கரங்களை
படர விடுவது ஏனோ!
பாதசாரியாய் அவள் போக - இச்சை
கண்களுடன் நோட்டமிடும் ஆடவர்!

இரத்த வாடை
வேதனையின் உச்சம் - அவள்
இரத்தமும் அவளும் பிரிவின்றி
ஒன்றான வரமோ!
வாரத்தில் ஐந்து நாட்கள் - எவர்
அறிவார் அவள் குடல் பிடுங்கும் வலியினை...
இச்சை மனம் கொண்ட துச்ச கயவர் அறிவாரோ
அவளின் வேதனையை!

அறிவு தெளிந்த பருவத்திலிருந்து
மூடிக்காத்த பெண்மையை
துச்ச மனம் கொண்ட கயவனால்
பறிக்கப்படும் முறை சரியோ?
அறியாத வயதினில்
தகப்பன் பெயர் தெரியாத கருவை
பெண்மையின் வரம் என்று நினைத்து
வாழ்ந்த காலங்கள் போய் - இது
உன் விதி என்ற
கேள்விக்கணைக்குள் எய்யப்பட்டுள்ளோம்...

வறுமை அவளை வாட்டுகையில்
தடைகளைத் தாண்டி வாழ்வை சீராக்கிட
பணிப் பெண்ணாய் அவள் இருக்க
பணிப் பெண்தானே - என்று
தம் காமப்பசிக்கு இரையாக்க
துடிக்கும் கயவர்கள்!

ஐம்பூதங்கள் அடங்கும் கோபமும்
சக்தியும் கொண்ட அவள் மனம்
தாய்மையால் கரைந்து - தான் சுமக்கும்

சிசுவுக்காக உழைக்கும் வழியைத் தேடி
அலைந்து திரியும் காட்சி
நெஞ்சைப் பிளக்குதம்மா...

பெண் உரிமை, பெண் சுதந்திரம் என
விடுதலை பறை கொட்டியவர்கள் வீழ்ந்தாலும்
அவர்கள் எழுப்பிய முழக்கங்கள் இன்னும் எதிரொலிக்கின்றது
துச்ச மனம் கொண்ட அரக்க இனம்
இச்சை எண்ணம் கொண்ட ஈனப் பிறவிகள்!
ஏனோ இருந்து கொண்டே தான் உளர்
பெண் விடுதலை இறைவன்
செவியில் விழும் வரை!!
என் குரல் ஓயாது!!!

**- தனேஸ்வரி. கிருபானந்தராசா**
முதலாமாண்டு நுண்கலை

## மனிதம்

மனிதனுக்கு,
'அறம்' அவசியம்
'ஆசை' ஆடம்பரம்
'இயல்பு' இன்றியமையாமை
'ஈகை' மனிதத்தின் வெளிப்பாடு

'உண்மை' என்னும் விதை விதைத்து
'ஊக்கம்' என்னும் உரமிட்டு
'எளிமை' என்னும் வேலி போட்டு
'ஏற்றம்' என்னும் கனி சுவைக்க எண்ணினோம்

ஆனால்...
'ஐயம்' எனும் வெள்ளம்
'ஒற்றுமை' எனும் அணையை உடைத்தது.
அதனால்...
'ஓடி' விளையாடு பாப்பாவையும்...
'ஔவை' பாட்டியின் ஆத்தி சூடியையும்...
சேர்த்து...
மனிதத்தையும் மறந்தோம்!

**- சா. அமலா**
இரண்டாமாண்டு இயற்பியல்

# அம்மாவைத் தொலைத்தோம்!

என் பசுமைத் தாயே!
உன் குழந்தையாகிய என்னை
அன்பிலும் அரவணைப்பிலும்
தாலாட்டிச் சீராட்டி வளர்த்தாய்!
உன் அன்பில் கவிழ்ந்தேன்!
அழகில் மயங்கினேன்!

காலையில் பரிதியின் வெளிச்சம் பூமியில் விழும்போது
இயற்கை சிரிக்க நான் சிரிப்பேன்!
காலையில் வானம் வேலைக்குச் சென்று
மாலையில் பணி முடிந்தும் ஒன்றுகூட இரசிப்பேன்!
தென்றலில் மரங்கள் நடனமாட,
என் மனதும் நடனமாடும்!
முத்துக்கள் மின்னுவது போல்
ஆற்றில் நீர்த்துளிகள் மின்ன
என் கண்கள் கூசிடும்!

இன்று!
இவையனைத்தும் கனவாய்ப் போனது!
என் பசுமைத் தாயே!
முத்துக்கள் ஓடிய ஆற்றில்
குப்பைகளே ஓடுகின்றன!
மரங்களை வெட்டினோம்,
காடுகளை அழித்தோம்!
எங்களின் சுயநலத்திற்காக
உன்னை மான மிழக்கவிட்டோம்!

புன்னகை தவழ்ந்த உன் முகம்
கண்ணீரில் மிதக்க
உன்னுடன் ஓடி ஆடி விளையாடிய நாட்கள்
இன்றும் கண்ணீர் கனவில்...

உந்தன் உறவுகளே
எதிரியாகி விட
வெட்கித் தலைகுனிகிறேன்!
ஆகவே
மனிதஇனமே! விழித்தெழு!
நம்மை வளர்த்தெடுத்த
அன்னையைப் பாதுகாப்போம்!
போற்றுவோம்!!!

**- தீக்ஷனா**
முதலாமாண்டு நுண்கலை

# பல வேடிக்கை மனிதரைப்போல...
# வீழ்வேனென்று நினைத்தாயோ?



**- நோபல் பூவிதா. ஜா**
இரண்டாமாண்டு வேதியியல்

தலைவா!

மண்ணுக்குத் தமிழ் புகட்டியது
போதுமென்றா...?
விண்ணுக்குத் தமிழ் புகட்ட
சென்றாய்...!

இனி...
தமிழை யார் காப்பது...?
தமிழ் மெல்ல சாகும்
என்றான் பாரதி...
நீயே சென்ற பின்...
தமிழ் விரைந்து சாகுமடா...!
தமிழ் மண்ணுக்கு
உரிமை கோரி போராடினாய்

உனக்கு ஆறடி மண்கேட்டு
தமிழினமே போராடியது…!

உன் வெற்றிகள்
விண்ணை வென்றது….
எங்கள் ஒரு வெற்றி
உனக்கான
மண்ணை வென்றது…!
தலைவா!

தமிழை வாழ வைத்தாய்…!
தமிழினத்தை வாழ வைத்தாய்…!

உம் புகழை வாழ வைக்கவோ
இனி…
போராடும் தமிழினம்…

என்றும் உன் வழியில்
தமிழுக்காய்…
தமிழர்க்காய் நாங்கள்…!

**- டி. ஷைனி வேலண்டினா**
இரண்டாமாண்டு வேதியியல்

## இயற்கையின் இசைபாடும் தமிழுலகம்

கண்ணைக் கவரும் செவ்வானம்
காலையில் எழுந்ததும் குயில்கானம்
புல்லைத் தொடும் பனித்துளி
புவி எங்கும் தமிழ்மொழி
இயற்கையைப் பற்றி கம்பரின் கூற்று
என்மனம் களிகூரும் அதனைக் கேட்டு
கார்முகில் பொழியும் மழை
கரைகளைத் தொடும் கடலலை
மேகங்கள் மூடும் கருமலை
மனதைக் கவரும் இயற்கையின் கொடையே
இயற்கையின்றி உலகம் ஏது? என்று
தமிழோடு நீயும் இசைபாடு.

**- வி.ஜெ. ஆஷா ஷாலினி**
இரண்டாமாண்டு வேதியியல்

# அகல் விளக்குடன் ஒரு பேட்டி

உங்கள் பணியாதென நீங்கள் எண்ணுகிறீர்கள்?

கதிரவனின் ஆதியாய்
சந்திரனின் மீதியாய்
வீடோறும் ஒளியேற்றுவோம்
நாங்கள்.

உங்களுள் மிகவும் அழகானவர் யார்?

எதையும் தனதாக்கும்
அக்னியை ஆட்சிசெய்யும்
நாங்கள் அனைவரும் அழகியரே.

உங்கள் பயன்பாடு குறைந்ததைப் பற்றி உங்கள் எண்ணம்?

பழையன கழிதலும்
புதியன புகுதலும்
என்பதைத் தவறாகப்
புரிந்து கொண்ட மனிதர்களைப்
பழிப்பதில் என்ன பயன்
ஆனாலும்
எங்களுக்குப் போட்டியாய் வந்த
புலோரோசென்ட் லைட்டுகள்
வேண்டாத பொருட்களோடு
எங்களை வீசியதைப் பார்த்து
வேடிக்கை செய்கையில்
மனம் வலிக்கத்தான் செய்கிறது.

பழங்காலத்தில் உங்கள் செல்வாக்கு?

உலகோர் அனைவருக்கும்
இருளூட்டி வெய்யோன்
வெடுக்கென்று கோபத்தில்
சென்ற உடன்
தாமரைக் கரங்களால் எங்களைத்
தீண்டி, தாகத்தில்
தவித்த எங்கள் தானிலே
நெய் ஊற்றி

பூவுடல் கொண்ட
மடக்கொடியை மடக்கி
என்னுள் இட்டு
காதலர் இருவரைச்
சேர்த்து வைத்தே
மாதர்மனம் குளிர்ந்து
போனதை எண்ணியெண்ணி
என் அகமெல்லாம் ஆகாயம்
போன கதை கனவில்தான்
இன்று கண்டு மகிழ்கிறேன்.

வெற்றி தோல்வி பற்றி உங்கள் எண்ணம்?

அகண்ட ஆலமரத்தையே
சாய்க்கும் அளவிற்கு
காற்று எங்கள் வழியில்
வீசலாம்... சுடர்விட்டு
எழும் எங்கள் ஜோதியை
வீழ்த்தலாம்... ஆனால்
ஒளியிழந்த அந்நிலையை
நாங்கள் தோல்வியென்று
கருதுவதில்லை மீண்டும்
சுடர்விட அடுத்த வாய்ப்பு
வெகு அருகில் உள்ளதாகவே
கருதுகிறோம்.

வாழ்க்கையைப் பற்றி உங்கள் கண்ணோட்டம்?

போராடி ஒருவன்
பெற்ற ஒளித்திரளை
திரைகுள்ளே மூடிவைக்க
எண்ணிவிடாமல்
மாடம்தனில் அழகாக
ஏற்றி வைத்தே
அனைவரும் ஒளிமழையில்
நனைந்திடுவோம்.

**- கி. மதுமிதா**
முதலாமாண்டு கணிதவியல்

# இன்று காந்தி இருந்திருந்தால்

ஓர் ஊன்று கோலுடன் வருகின்றார்
நம் தேசப் பிதா.
ஆனால் இம்முறை இராட்டையைச் சூழற்றவில்லை
சாட்டையைச் சுழற்றினார்.
அகிம்சையை மட்டும் கைவிடவில்லை.
நாட்டுப்பற்று - காட்டுத்தீயாய் பரவியது
இளையோர் உள்ளத்தில்!
வாழ்த்தினார் - ஜல்லிக்கட்டுப் போராட்டத்திற்கு
வருந்தினார் - முதுகெலும்பு முடங்கிப் போனதற்காய்!
அவர் வந்த பிறகு,
சாதியில்லை, சண்டையில்லை பாரதத்தில்
வீதியெல்லாம் புன்னகை பூத்தது.
என் நதி, உன் நதி என்றவர்கள்
நம் நதி என்று மொழிந்தனர்.
சுயநலமிக்கோரின்
ஊழல் பணம் மீட்கப்பட்டது
சமமான ஆட்சி அமைந்தது.
எல்லையில் போராட்டங்கள் எல்லையோடு முடிந்தது.
மொழிச்சண்டை, நீதிச்சண்டை நீக்கப்பட்டது
விவசாயம் செழித்தது; மழை பொழிந்தது.
ஏழைகளின் பாடுகள் குறைந்தது.
ஓட்டுக்கு நோட்டு விற்பனை ஒழிந்தது.
பெண்களின் கற்பைப் பாதுகாத்து
தற்காப்புக்கலையுடன்
2020 - வல்லரசு, நல்லரசானது.
ஏவுகணைகளோ பறக்க
அந்நியர்களை வியக்க வைத்து
இந்தியர்களை மெய்சிலிக்க வைத்தது.
இந்தியா மட்டும் பிறக்கவில்லை
இந்தியர்களும் பிறந்தனர்.
வரலாறு மாற்றி எழுதப்பட்டது.
இந்திய வரைபடத்தில் ஓர் மாற்றம்
இந்தியா - பாகிஸ்தான் ஓர் தேசம்
பல காந்திகளை உருவாக்கினார்.
“திருந்துபவர் திருந்தட்டும்
திருந்தாதவர்கள் திருத்தப்படுவர்”
என முழங்கினார்.

**- கிருத்திகா. கிரு.**

இரண்டாமாண்டு வரலாறு மற்றும் சுற்றுலாவியல்

## சென்னையில் மழையின் விளையாட்டு

மழை தொடங்கிய மாதம்
அது டிசம்பர் மாதம்!
இடியும் மின்னலும் மோதின
பலரின் வாழ்க்கையைத்
தரைமட்டமாக்கின!
சாலைகளில் தண்ணீர் தேங்கின
அதனுடன் மின்சாரத்தையும் பறித்தன.
முன்னர் பகட்டான வாழ்க்கை வாழ்ந்தனர்
பின்னர் அனைத்தையும் இழந்து தவித்தனர்
உடுத்த ஆடையும் இன்றி
உண்ண உணவும் இன்றி.
தவித்தவர்களை ஆதரித்தவர்கள் பலர்!
வெள்ளத்தில் சிக்கி காப்பாற்றப்பட்டவர்கள் சிலர்
இதில் பலர் வெளிப்படுத்திய பண்பு
உனக்கு நாங்கள் இருப்பதை நம்பு.

## செம்மொழியின் சிறப்பு

தடுக்கி விழும்போது அ, ஆ…!!!
சிரிக்கும் பொழுது இ, ஈ…!!!
சூடுபடும் பொழுது உ, ஊ…!!!
கோபத்தின் பொழுது எ, ஏ…!!!
ஐயத்தின் பொழுது ஐ…!!!
சிந்திக்கும் பொழுது ஒ, ஓ…!!!
மன ஆறுதலுக்கு 'ஔ' டதம் தனிச் சிறப்பினைக்
கண்டு வியந்தேன்! மகிழ்ந்தேன்!
தமிழ்மொழி என்றும் செம்மொழியாகும்
தனித்தியங்கும் தனிமொழியாகும்!
வாழ்க தமிழ்!!!
வாழ்க தமிழ்!!!

**- ஜோ. பிரின்ஸ் லீமா ரோஸ்**
முதலாமாண்டு கணிதவியல்

## விந்தை மாந்தர்கள்...

செலவுசெய்து செவ்வாயில் நீரைதேடும் ‘அறிவாளிகள்’
இலவச மழையமுதை வீணடிக்கும் ‘அறிவிலிகள்’
ஒய்யாரமாய் பல்லாயிரம் கோடியில் புரளும் நீ
ஓடாய்த் தேய்ந்து தெருக் கோடியில் புரளும் நான்
தினந்தோறும் அறுசுவை விருந்துண்ணும் நீ
ஒருவேளை கூழுக்கே கூத்தாடும் நான்
வலையில் மீன் சிக்காதோ என்று காத்துக் கிடக்கும் நான்
கோட்டுசூட்டுடன் குளிரூட்டப்பட்ட அறையில் நீ
அரைகுறை ஆடையுடன் வெயிலில் வாடும் நான்
ஆனால் விந்தை என்னவென்று தெரியுமா
உனக்கும் எனக்கும் அதே ஆறு அடி குழிதான்...
விந்தையான வாழ்வின்
விந்தையை உணர்வாய்
விந்தை மனிதா!

**- வி. கிரேஸ் சுஷ்மா**
முதலாமாண்டு கணிதவியல்

## உப்புடன் ஒரு பேட்டி

* தங்களைப்பற்றி ஓரிரு வரிகள்...

நீலப்பச்சை பட்டு உடுத்திய
மங்கையின் நீலத்திலும்...
உன்னத மனிதரின்
செந்நிற மலர்விழியிலிருந்து
வழியும் கண்ணீரிலும்
இருப்பவன் நானே!

எனவே, நானின்றி இந்த உலகமும், நீங்களும் இல்லை.

* உலகம் இல்லை என்று கூறினாய்... சரி... நாங்களும் ஏன் இருக்கமாட்டோம் என்று சொன்னாய்?

உங்களுக்கே தெரியும் நான் இல்லாத
சாப்பாடு குப்பையிலே...
எனவே, உணவின்றி மனிதரும் இல்லை.

* வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது எது என்று எண்ணுகிறீர்கள்?

    ஒற்றுமை ஒன்றுதான்...
    ஏனெனில் நாங்கள் ஒருங்கிணைந்தால்
    அந்த இமயத்தையே இங்கே கொண்டு வந்து விடுவோம்
    என்ன புரியவில்லையா?...
    எங்களை ஒன்றாகக் குவித்து
    வைத்திருக்கும் உப்பளம் தானுங்க.

* உங்களின் வாழ்க்கைப் பயணத்தில் உங்களால் மறக்க முடியாதது எது?

    நமது தேசப்பிதா
    எங்களது முன்னோர்களுக்காக
    ‘உப்பு சத்தியாகிரகத்தில்’
    ஈடுபட்டது தாங்க!

* உங்களை மிகவும் பெருமைபடுத்தும் நிகழ்வு என்ன?...

    தனக்கு அடைக்கலம் கொடுத்த அன்பர்க்கு
    துளியும் துரோகம் செய்யத் துணியவில்லை
    என்பதை உணர்த்த என்னைத் தான்
    உபயோகிப்பார்கள்.

* உங்களுக்கென வாழ்க்கையில் ஏதாவது பெரிய பொறுப்பு இருக்கிறதா?

    ஆம்... மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது
    ஒருவர்க்குச் சினம் வரவில்லை என்றால்
    என்ன கேட்பார்கள்... ‘‘நீ சோற்றில் ‘உப்பு’ போட்டுத்
    தானே சாப்பிடுகிறாய்?’’ என்று என்மீது
    தானே பொறுப்பை ஏற்றுவார்கள்.

* நீங்கள் என்றாவது சினங்கொண்டது உண்டா?

    ஆம்...
    புதிதாக சமயலறையுள்
    நுழைகிற நாகரிகப் பெண்.
    எனக்கும் என் சகோதரியான
    சர்க்கரைக்கும் வித்யாசம்
    தெரியாமல் உபயோகிக்கும் போது...

* உங்களுக்கு ஏதேனும் முக்கியப் பணி உண்டா?

    கெடாமல் பாதுகாப்பதே எங்களது ‘பணி’
    என்ன புரியவில்லையா?
    கருவாடையும் ஊறுகாயையும் சொன்னேன்.

* உங்களுக்கு எங்களிடத்தில் கேட்க வேண்டிய கேள்வி ஏதாவது?

பாரினில் பல கடற்கரைகள் இருந்தாலும்
ஒன்றனில் நான் அதிகம் இருப்பதால்
'உயிரற்ற கடல்' என்று
சொல்லி அழைக்கிறீர்களே? ஏன்?

* உங்களுக்குப் பிடித்த பழமொழி எது? ஏன்?

"உப்பு தின்றவன் தண்ணீர் குடித்தே
ஆகணும் என்று தவறு இழைத்தவன்
தண்டனை பெற்றே தீர வேண்டும்
என்ற நியதியை வலியுறுத்துவதால்
பிடித்து இருக்கிறது.

* உங்களுக்கு எனத் தனியே ஏதேனும் இலக்கியப் பார்வை உண்டா?

"உப்பிட்டவரை உள்ளவரை நினை" என்பதை
நினைவூட்டும் வள்ளுவர் பெருந்தகையின் நன்றி மறவாமைக்கு
நாங்களே சான்று.

* எங்களிடத்து உங்களின் கோரிக்கை?

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு"
என்பதற்கேற்ப என்னை அளவாய் உண்டு
உணவினைச் சுவைத்து ருசித்து சாப்பிட்டு
ஆரோக்கியமாக வாழுங்கள்.

**- வி. கிரேஸ்சுஷ்மா**
முதலாமாண்டு கணிதவியல்

## எறும்புடன் ஒரு பேட்டி

1. உங்கள் இனத்தைப்பற்றி ஏதாவது சொல்லுங்களேன்?
நாங்கள் உருவத்தில் சிறியவர்கள்; மனிதர்களால்
மிதிபடுபவர்கள்; கடின உழைப்பாளிகள்; வருங்காலத்திற்காக
சேமித்து வைக்கும் குணம் படைத்தவர்கள்.

2. மனிதர்களை நீங்கள் ஏன் கடிக்கிறீர்கள்?
நாங்கள் உங்களை எதுவும் செய்வதில்லையே
எங்களுக்கும் இந்த உலகத்தில் வாழ உரிமை
இருக்கிறது மனிதர்களாகிய நீங்கள் எங்களை
நசுக்கிக் கொன்று விடுகிறீர்கள். எங்களைக்
காப்பாற்றிக் கொள்ளவே நாங்கள் கடிக்கிறோம்

3. நீங்கள் ஏன் எங்கள் வீட்டில் உள்ள இனிப்புகளை வந்து சாப்பிடுகிறீர்கள்?
இனிப்பு எங்கே இருந்தாலும் நாங்கள் அங்கு
வருவோம். அதுதான் எங்களது இயல்பு.

4. ஏன் எப்பொழுதும் நீங்கள் ஓடிக் கொண்டே இருக்கிறீர்கள்? ஒரு இடத்தில்
நிரந்தரமாக இருக்க மாட்டீர்களா?
நாங்கள் மனிதர்களைப் போல சோம்பேறிகள் அல்ல.
உழைப்புக்குப் பேர்போனவர்கள். ஒரு இடத்தில் இருக்க எங்களுக்குப் பிடிக்காது.

5. உங்களை விட எடை அதிகமான உணவுப் பொருளை
ஏன் பேராசைப்பட்டுத் தூக்கிச் செல்லுகிறீர்கள்?
நீங்கள் பணத்துக்கும், பதவிக்கும் பேராசைப்படுவதை விடவா நாங்கள்
பேராசைப்பட்டு விட்டோம். எங்கள் உணவைதானே தூக்கிச் செல்கிறோம்.

6. நீங்கள் வரிசையாகச் செல்லும்பொழுது
ஒருவருக்கொருவர் என்ன பேசிக் கொள்கிறீர்கள்?
ஒருவரையொருவர் முதுகில் தட்டிக்கொடுத்து உற்சாகப் படுத்துவோம்.

7. நீங்கள் எதைப்பற்றியாவது சிந்திப்பதுண்டா?
ஆம், சில நேரங்களில் நாட்டில் குற்றம் செய்பவர்களைப் பார்க்கும் போது
அவர்களை நறுக்கென்று கடித்துவிடத் தோன்றும்.

**- ரொ. ரெனிடெய்ஸி**
முதலாமாண்டு கணிதவியல்

## விவசாயி

வெயிலோ குளிரோ அறியாது
உழைக்கும் நேரம் தெரியாது
சிந்தும் ஒவ்வொரு சொட்டு வேர்வையும்
மண்ணில் புதைவது கிடையாது
வேர்வை விளைபொருளாய் மாறி
உடம்பில் குருதியாய் ஓடுவது
நகர வாசிகளுக்குத் தெரியாது
வெயிலைக் கண்டால் குடையைத்
தேடும் கைகளுக்கு வெயிலில்
உழைக்கும் விவசாயியின் அருமை புரியாது
எவ்வளவு பஞ்சம் வந்தாலும்
விவசாயத்தை விட்ட விவசாயியை மறக்கும் உலகமே!
விவசாயத்தை மதிப்போம்!
அவன் உழைப்பிற்கு உயிர்க் கொடுப்போம்!

## பட்டாம்பூச்சி

வண்ண வண்ணமாய்ப் பூக்களில் நீ
குழந்தைகளை உன்னிடம் ஈர்க்கும் காந்தம் நீ
உன்னை வர்ணிக்கவோ வார்த்தைகள் திண்டாட்டம்
உன்னைப் பார்த்ததும் பூக்களுக்கெல்லாம் கொண்டாட்டம்

உன் வாழ்நாளோ ஒரு வாரம்
ஆயினும் ஒரு கோடி முகத்தின் புன்னகைக்குக் காரணம்
மனிதா பட்டாம்பூச்சியாகப் பூமியில் போராடு
வாழும் காலத்தில் பிறர் சிறப்பிற்குக் காரணமாகும்
சிறகடித்துப் பறந்து உன் இலக்கைத் தொடு.

**- கீர்த்தனா. பி.**
முதலாமாண்டு கணிதவியல்

## நினைவில் நின்றாய்...

அந்த மரத்தைப் பார்த்தேன்
பின்னே போனேன் எத்தனை காலங்கள்
நாம் இருவரும் சுற்றிச் சுற்றி வந்த
நினைவுக்குப் போனேன்
மேலே ஏறி கீழே விழுந்து
அழுகையும் வந்ததோ

உன் புன்சிரிப்புற்ற முகத்தைப் பார்த்து
அழுகை காற்றில் பறந்ததே
மீண்டும் நாம் மேலே ஏறி
நிலவைப் பார்ப்போமா
இந்த நினைவை நெஞ்சில் சுமந்து கொண்டு
பல காலங்கள் வாழ்வோமா.

**- ரொ. ரெனி டெய்ஸி**
முதலாமாண்டு கணிதவியல்

# இரு மீன்களின் கதை...

அன்று கோடை வெயில் உச்சத்தில் இருந்த சமயம் அது. அந்தக் காட்டில் இருந்த அனைத்து மரங்களின் இலைகள் முழுவதுமாய் உதிர்ந்த நிலையில், அங்கிருந்த ஒரு சிறிய குட்டையின் அருகில் அசையாமல் நின்றிருந்த மரத்தில் மட்டும் ஒரேஒரு பழுப்பு நிற இலை கிளையின் நுனியில் ஒட்டிக் கொண்டு இருந்தது. ஆனால், அந்தப் பழுப்பு நிற இலையும் அப்போது அடித்த சிறு அனல் காற்றினால் மெல்ல அசைந்து ஊசலாடிக் கொண்டே குட்டையில் விழுந்து தன்னைச் சுற்றிச் சிறுசிறு அலைகளைத் தோற்றுவித்தது. இதனைக் கண்ட தண்ணீரினுள் இருந்த மீன்கள் தங்களிடையே பின்வருமாறு பேசிக்கொண்டன. மீன்தானே பேசப்போகிறது என்று உதாசினப் படுத்தாதீர்கள். வாருங்கள் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கேட்போம். சிவப்பு மீன் ஒன்று, ‘‘இந்த ஓங்கி உயர்ந்த மரத்தில் ஒட்டிக்கொண்டு இருந்த ஒரு இலையும் இப்போது அடித்த காற்றில் விழுந்துவிட்டதே! ஒரு காலத்தில் வனப்புமிகு மரகத மரங்களின் வனமாக இருந்த இது தற்போது பாலைவனமாக மாறியுள்ளது. இதற்கு முழு காரணமும் இந்தப் பேராசை பிடித்த மனிதர்கள் தான். அவர்கள் தாங்கள் வாழ அடுக்குமாடிக் கட்டிடம் செய்கிறோம் என்றும், வீட்டை அலங்கரிக்க பலகைகளால் கட்டில், கதவு, நாற்காலி எனப் பல பொருட்களைச் செய்கிறோம் என்று இந்தக் காட்டை மட்டுமன்றி இந்த உலகில் இருக்கும் பல காடுகளை அழிக்கின்றனர். விளைவு, காற்றுமாசு அதிகரித்தல், நிலத்தடி நீர் பற்றாக்குறை, சுவாசக் கோளாறுகள் முதலிய பல்வேறு நோய்களுக்கும் ஆளாகின்றனர். இதனால் தான் நமக்கும் தேவையான மழை கிடைப்பதில்லை. ஆனாலும் இந்த மனிதர்கள் கோடிக் கணக்கில் செலவு செய்து வாகனங்களை வாங்கி காற்றை மாசுப் படுத்துகின்றனர். ஆனால், அதனைத் தடுக்க ஒரு மரக்கன்று கூட நடுவதில்லை. இப்படியே போனால் நாம் சுவாசிக்க தூய்மையான காற்றைக்கூட விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு ஆளாகிவிடுவோம். ‘நாமில்லாமல் மரம் வாழும் ஆனால் மரமில்லாமல் நாம் வாழ முடியாது’ - என்பது ஏன் மனிதர்களின் புத்திக்கு எட்டவில்லையோ?....

**இக்கதை உணர்த்தும் நீதி :**

ஆகையால் இளைஞர் சமுதாயமான நாம் நம்முள் மாற்றத்திற்கான விதையை விதைத்து மரமாக மாறி மற்றவர்களுக்குக் கனிதர பாடுபட்டு உழைத்து... நம் நாட்டின் மரவளத்தைக் காப்போம் வாரீர்!

**- வி. கிரேஸ்சுஷ்மா**
முதலாமாண்டு கணிதவியல்

## நெருப்பு

ஒளி தருவதே உன் சிறப்பு!
உன் நிறமோ மஞ்சள் சிவப்பு!
நீயே ஆதி முதல் கண்டுபிடிப்பு!
ஐம்பூதங்களுள் நீ ஒன்று...
ஒளி ஊட்டினாய் இருளைக் கொன்று...
செங்கதிரோனே உனது அவதாரம்
அதை நெருங்கினால் பெரும் அபராதம்
சாட்சி நீயே வாய்மைக்கு
தாய்மை நீயே தூய்மைக்கு
நீயின்றி எனக்கேது சாப்பாடு?
எங்கள் மீது
காதல் கொண்டால்
போடுவோம் கூப்பாடு!

## சிவப்பு ரோஜாவின் பரிசு

சிவப்பு ரோஜாவே!
உன்னைப் பார்த்தால்
சிதறுகிறது என் சோகம் வைரப் பனித்துளிப் போல...
சிவந்த வானைப் பார்த்துப் புன்னகைக்கிறாய்
என்னைப் பார்த்தும் அழகாய்ச் சிரிக்கிறாய்
என் கன்னம் சிவக்கச் செய்கிறாய்
கவலை மறக்க வைக்கிறாய்!
காற்றில் அசைந்து - நலம் விசாரிக்கிறாய்
கவனிக்காவிட்டால்... தலைசாய்க்கிறாய்
மன்னிப்புக் கேட்டு
நான் இறைத்த நீர் பட்டு
பரிசாய்த் தருகிறாய்
ஒரு புதிய மொட்டு!
மனிதப் புன்னகைக்கு
ஏங்கிய எனக்கு
இதமாய் இன்பமளிக்கிறாய்
என் வீட்டு சிவப்பு ரோஜாவே!

# ஊக்கமே உயர்வு

நான், மொட்டாய் பிறந்து
பூவாய் விரிந்து
காயாய் கனிந்து
பல கல்லடிப் பட்டாலும்
அதன் சுவடுகள் என்மேல் இருந்தாலும்
சில நொடிகளுக்குள் அதை மறந்து
சிரித்தாலும்...
என்னைச் சார்ந்தவர்களுக்கு இன்பத்தையே
தந்தேன்... ஆனாலும்...
தூக்கி எறியப்பட்டேன்...
விதையாய் மண்ணில் விழுந்தேன்
மீண்டும் மரமாய் எழுவேன்!!!

**- வி. கிரேஸ்சுஷ்மா**
முதலாமாண்டு கணிதவியல்

# பேனா முனை

அன்றோர் இரவு கண்ணைக் கவரும் வண்ண வண்ண விளக்குகளால் பளிச்சென்று மின்னியது 'அமுதா பல்பொருள் அங்காடி' அழகாக அடுக்கப்பட்ட விதவிதமான பொருட்களும் ஆரஞ்சு நிற சீருடை அணிந்த உதவியாளர்களும் அவரைப் பெரும் அன்போடு வரவேற்றனர். வரவேற்பை ஏற்றபடி மெல்ல உள்ளே சென்றார், பழமும் பழரசமும் அவர் மூக்கைத் துளைக்க, பேனாக்களின் உலகிற்குள் படையெடுத்தார். அந்தக் கருப்பு கோட்சூட்காரரின் சட்டைப்பையை அலங்கரிக்க பேனாக்கள் அனைத்தும் முன்வந்தன. அவர் கண்களில் தாம் தான் அழகாகத் தெரிய வேண்டும் என்று எண்ணி ஒன்றோடு ஒன்று சண்டை போட்டுக்கொண்டிருந்தன. அந்தக் கருப்புக் கோட்காரரின் முகத்தில் திடீரென்று ஒரு ஒளி தெரிந்தது, அமைதியின் சின்னமான வெள்ளை நிறப்பேனா ஒன்றை வெடுக்கென்று எடுத்துக்கொண்டு நடந்தார். அதுவரை அமைதியாக இருந்த அந்தப் பேனா தன்னை எண்ணி பெருமிதம் கொண்டது. தன் பிறவிப்பயனை அடைந்ததாக எண்ணியது. பொழுது சாய்ந்தது. மறுநாள் அந்தக் கருப்புக்கோட்காரருடன் மகிழ்வுந்தில் மகிழ்ச்சியோடு உலகைப்பார்த்தபடி சென்றது. மகிழ்வுந்தில் இருந்து இறங்கியவர் ஒரு சிவப்பு வெள்ளை கோட்டைக்குள் நுழைந்தார். அனைவரும் எழுந்து மரியாதை செலுத்தினர். நீதிதேவதையை வணங்கியபடி இருக்கையில் அமர்ந்தார். வாதங்கள் தொடங்கின. பரபரப்பான அனல் பறக்கும் விவாதங்களுக்கு இடையே ஒரு குரல்

குற்றவுணர்ச்சியுடன் பேசத் தொடங்கியது. ‘‘வாழ்வில் பணம், காசு என்று பறந்த எனக்குப் பாசம் கண்ணிற்குத் தெரியவில்லை.... அதனால் தான் இந்தக் குருடன் பாராட்டி சீராட்டி வளர்த்த அன்னையை ஆண்டவனிடம் அனுப்பி விட்டேன்’’ என்று கூறிக் கதறினான். இந்தக் கொடுமையைக் கேட்டுக்கொண்டிருந்த வெள்ளைப்பேனா மனிதநேயமே இல்லாத மாநிலம் தனக்கு வேண்டாம் என்று முடிவெடுத்தது. தன் மை கொண்டு அந்தக் குற்றவாளியின் வாழ்க்கையின் இறுதி ஓலையை எழுதியதோடு, தன் பிறவிப்பயன் அவர் சட்டையை அலங்கரிப்பது அல்ல சட்டத்தை அலங்கரிப்பது என்று எண்ணிப் பூரித்தது. தன் உடைந்த முனையைப் பார்த்துச் சிரித்தது... அந்நொடி முதல் உலகில் இதுபோன்ற குற்றங்கள் நடக்காது என்று நப்பாசையில்.

## யாசகம்

தனக்காகத் தானம்
கேட்போர் மத்தியில்
பிறருக்காகத் தானம்கேட்டு
வானிடம் தலைகுனிந்து
நிற்கிறான் விவசாயி...

## ஓட்டம்

உறவைச் சேர்த்து
அன்பை விதைக்க
ஓடிக்கொண்டிருந்த உலகம்
இன்றும் ஓடுகிறது
காகிதத்தைச் சேர்த்து
பகையை விதைத்திடவே...

## தோல்வி

வாழ்க்கை என்பது
வெற்றியைத் தலையில் சுமந்து
ஓரிடம் நிற்பதல்ல...
தோல்வியைத் தோளில் சுமந்து
ஓயாமல் ஓடுவதாகும்...

**- கே. மதுமிதா**
முதலாமாண்டு கணிதவியல்

# வீறுகொண்ட நெஞ்சினால்...

கண்ணைத் திறந்து
கார்முகிலைப் பார்த்தேன்
கள்ளிப்பால் கொடுத்தாள் என்
கலங்காத தாய்...
வீறுகொண்டெழுந்தேன்!

அடுப்பங்கரையில் இருந்து
அரைமைல் தூரம் செல்ல
அனுமதி மறுக்கப்பட்டது
வீறுகொண்டு எழுந்தேன்!

வளமைமிகு சோலைவழி
வண்ணவண்ணப் பூக்களோடு
வகுப்பறை செல்ல
வானளவு தடை வந்தது
வீறுகொண்டு எழுந்தேன்!

செம்மையான சூரியன்போல்
சுடர்விட்டு எழ முயன்றேன்
பரிசாகக் கிடைத்தவை
புயலும் காற்றும்...
வீறுகொண்டு எழுந்தேன்!

கற்களில் நிற்க
முட்களைத் தாங்க
மலையில் ஏற
காலத்தை வெல்ல
வீறுகொண்டு எழுந்தேன்!
என் வழி முழுவதும் போராட்டம்
என் விழி முழுவதும் நீரோட்டம்
நிச்சயம் வெல்வேன்
வாழ்வை ஒருநாள் என்
வீறுகொண்ட நெஞ்சினாலே!

**- கே. மதுமிதா**
முதலாமாண்டு கணிதவியல்

## விவசாயிகளின் ஓசைகள்

ஆயிரம் கோடி
ஆண்டுகள் கடந்து
சிறு கல்லும் மண்ணும்
உரம் என எண்ணி
வந்தவனுக் கெல்லாம்
உணவள்ளிக் கொடுத்து
உணவளிப்பவனோ... இன்று
வாழ வழி ஒன்றும் இன்றி
எம் மண்ணுக்குத்
தண்ணீரும் இன்றி
கண்களில் கண்ணீரும் இன்றி
கடவுளே எனக்காக
நீ மரித்தது உண்மை எனின்
நீ போதித்தது உண்மை எனின்
உம் மூத்த பிள்ளைகள்
தலை நிமிர்ந்து வாழட்டும்.

**- நர்மதா. கோ**
முதலாமாண்டு கணிதவியல்

## உன்னை நேசிக்கும் உன்னால் துரத்தப்படும் பூனை

என் உலகம் மிகவும் சிறியது...
உன் காலடியில் நிற்கும் நான்
பல நேரங்களில் மிதிபடுவதுண்டு
நான் இடையே சென்றால் அபசகுனம்
என்ற இழி சொல்லையும் தாங்கிக்கொள்கிறேன்
'நாய்களுக்கு மட்டும் தான் உண்மையாகப் பாசம்
வைக்கத் தெரியும்' என்று சொல்லும் இவ்வுலகில்...
நானும் அலைகிறேன் வீடு வீடாக
உன் அடைக்கலம் தேடி
என் மீது நீ அன்பு காட்டவில்லை
என்று வருந்துவதில் பொருளில்லை!

மனிதன் மனித நேயத்தையே விலைக்கு விற்று விட்டான்!
புறக்கணிக்கப்பட்டது என் அன்பு
ஒரு முறையல்ல... இரு முறையல்ல...
நான் அன்பு செலுத்திய ஒவ்வொரு முறையும்
துரத்தி விட்டாலும் மீண்டும் நிற்கிறேன்
மனிதா உன் காலடியில்...!
என் மனதையும் ஒரு நாள் நீ புரிந்து கொள்வாய்
என்ற நம்பிக்கையில்...
இந்த எதிர்பார்ப்போடே என் வாழ்க்கை முடிந்தால்
அதுவும் உன் காலடியில் தான்
உன் காலடியே எனது உலகம்...

**- ம. வித்யா**
முதலாமாண்டு கணிதவியல்

## மழை

தண்ணீர் தருவது மழை
தாகம் தீர்ப்பது மழை
வளர்ச்சி பெருக்குவது மழை
தளர்ச்சி போக்குவது மழை
பசுமை வளர்ப்பது மழை
வறட்சி நீக்குவது மழை
இன்பம் தருவது மழை
துன்பம் தீர்ப்பது மழை
மனம் தருவது மழை
மகிழ்ச்சி பெருக்குவது மழை
இவ்வையத்துக்கு வந்து நம்மை
மகிழ்வித்து நமக்கு உயிர்நீரை
அளிக்கும் மழையைப் போற்றி
சேமிக்க வேண்டாமோ?

**- வே. டெய்சி**
முதலாமாண்டு வரலாறு மற்றும் சுற்றுலாவியல்

# அம்மா

என்ன ஒரு அழகு சித்திரம்
எங்கு சென்றாலும் என்ன செய்தாலும்
அனைத்திலும் அவள் சொல்லிக் கொடுத்த
வித்தைகளைப் பயன்படுத்தி பெயர் பெற்றேன்
என்ன நேர்ந்தாலும், செய்தாலும் அனைத்திலும்
வெற்றிபெற்று தன் கணவன் பெயர்
உயர்த்திப் பிடிப்பதில் கண்ணாய் இருப்பாள்
இன்பமானலும் துன்பமானாலும் அதை அவள்
கையாளும் முறையோ வேறு. ஒரு
சிற்பம் கலை வடிவம் பெறும்
முன் அனுபவிக்கும் வேதனையோ சொல்ல
முடியாத ஒன்று. அதனை அனுபவித்து
ஒரு அன்பு வடிவ சித்திரமாய்
என் கண் முன் நிற்பவள்
என் அம்மா! அவளுக்குச்
சரிநிகர் யாருமுண்டோ?

**- வே. டெய்ஸி**
முதலாமாண்டு வரலாறு மற்றும் சுற்றுலாவியல்

# கயல்விழியின் கண் திறந்த கல்வி

அதுவரை கனவில் மட்டுமே பார்த்த அந்த விருதினை அன்று தன் கைகளில் பார்த்ததும் அவள் கண்களின் ஓரம் வழிந்த கண்ணீர் ஒரு கதை சொன்னது. அவளின் அந்த ஒரு நிமிட மௌனம் அவள் அனுபவங்களைச் சொல்லத் தொடங்கியது. எவருடைய துணையுமின்றி உறவினரால் புறக்கணிக்கப்பட்டவளாய் நடுத்தெருவில் கிழிந்த உடையுடன் தன் உடைந்த இருதயத்தைப் பிடித்துக்கொண்டு, ஆதரவற்று நின்ற காட்சி, அவள் கண் முன் வந்து நின்றது. ஏறக்குறைய எட்டு ஆண்டுகளுக்கு முன்னர், அந்தக் கருப்பு தினம் அவள் கண்களில் நிழலிட்டது. தனக்கு ஒரே ஆதரவாய் இருந்த தன் தாயை இழந்த அந்நாள். வாழ்க்கையின் விபரீத விளையாட்டைப் பொறுக்கமுடியாமல் தன்னையே வெறுத்தாள் கயல்விழி. உடுத்தியிருந்த உடையும் கற்ற கல்வியும் தவிர அவளிடம் வேறொன்றுமில்லை. ஒருவரும் துணை நிற்காவிடினும் தனி ஒரு பெண்ணாக அவளே அவளுக்கு நம்பிக்கை கொடுத்து தேற்றிக்கொண்டாள். படாதபாடுபட்டு, இரண்டாம்

நாள் ஒரு சிற்றுண்டிச் சாலையில் வேலை கிடைத்தது. இரண்டு நாட்களாகப் பசியோடு இருந்த அவளுக்கு மயக்கம் வரும்போல் இருக்கவே, அப்படியே கீழே விழுந்தாள். அந்த உணவகத்தின் உரிமையாளர் சுந்தர், வயது 42 மயிலாப்பூரில் தன் மனைவியுடன் போதுமென்று சொல்லும் அளவுக்கு வசதியாக வாழ்ந்து வருகிறார். அன்று கயல்விழி அவர் கடையில் மயங்கி விழுந்ததும் தண்ணீர் தெளித்து அவளை எழுப்பி என்ன ஆயிற்று என்று விசாரித்தார்.

அவர் கேட்டவுடன் கண்களில் கண்ணீர் மல்க பசிக்குது சார், ரெண்டு நாளா சாப்பிடல என்று கூறினாள். அதைக் கேட்டதும் அவளுக்கு உணவளித்து, அதன் பின் அவள் கதையைக் கேட்டு நீ மேலும் படிக்க விரும்புகிறாயா? ஆம், என்று சொன்னவளைக் கல்லூரியில் சேர்த்து படிக்கவைத்தார் சுந்தர். ஆனால் கயல்விழியோ தன்மானம் மிகுந்தவள் தான் உழைத்துச் சம்பாதித்த பணத்தில் தான் படிப்பேன் என்ற வைராக்கியம் கொண்டவள். தாயைப் பறிகொடுத்தபின் உள்ளதையெல்லாம் பிடுங்கிக்கொண்டு தன்னைத் தனியே கதறவிட்ட உறவுகள் மத்தியில் உயர வேண்டும் என்ற வெறி அவளிடம் கொஞ்சமும் குறையவில்லை. ஒருநாள் நீங்கள் அனைவரும் வியக்கும் வண்ணம் படித்து முன்னேறி நல்ல நிலைமை அடைந்து மேடையேறி விருது வாங்குவேன் என்ற சபதம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. படித்தாள், இளங்கலைப்பட்டம் பெற்று அதற்கேற்ற பணியில் அமர்ந்து முதுகலைப்பட்டம் பெற்றாள்.

தான் படித்தத் துறையில் ஒரு பெரிய ஆய்வினைச் செய்து பற்பல புதிய அணுகுமுறைகளைக் கொண்டுவந்து முனைவர் பட்டம் பெற்றாள். தனக்கென சொந்த வீடு நான்கு சக்கர வாகனம் என வசதியாக வாழத் தொடங்கினாள். இருந்தாலும் அவள் மனதின் ஓரம், ஒரு பாரம், தன் பணியை அங்கீகரித்து ஒரு விருது கிட்டாதா? என்று... சில மாதங்கள் கழித்து தன் ஆய்வின் வேலை நிமித்தம் அயல்நாட்டுக்குச் சென்ற அவள். தன் தாயை மட்டுமல்லாமல் தன் தாய்த்திருநாட்டையே பெருமை பெறச் செய்தாள். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதற்கேற்ப, தன் அறிவுக் கூர்மையால் அங்கு, பலரையும் கவர்ந்தாள். நாடு திரும்பிய சில வாரங்களில் அழைப்பு ஒன்று வந்தது. 2017ன் சிறந்த ஆராய்ச்சியாளர் விருது அவளுக்கு கிடைக்கவிருப்பதை அறிந்து, மனம் குளிர்ந்து உவகையின் உச்சத்தையே உணர்ந்தாள் கயல்விழி.

அப்போது மேடையில் கையில் விருதுடன் இதையெல்லாம் ஒரு கனம் எண்ணியபோது அவள் மனம் கனத்தது. குரல் தழுதழுக்க அவள் சொன்னள். "கல்வி என் கண்திறந்து என்னைத் கரை சேர்த்தது" என்று!...

**- ரா. அனிதா**

முதலாமாண்டு பொருளாதாரம்

# இயற்கை ஆறு

நீ தோன்றும் இடம் மலை
நீ ஓடும் இடம் சமவெளி
நீ சேரும் இடம் கடல்
நீ பாயும் இடம் வயல்வெளி
உன்னை நம்பி இருக்கும்
விவசாயிகளுக்கு நீ தான் உயிர்
நீ ஓடும் இடத்தில் கல்லை
சலவை செய்யும் நதியே
அழுக்கு நிறைந்த இந்த மனிதர்களின்
மனதையும் ஒரு முறை சலவை
செய்து விட்டுச் செல்வாயா?

**- காவியா. வி.கே.எம்.**
முதலாமாண்டு கணினி பயன்பாட்டியல்

# இலக்கியத்தில் அன்னை மரியாள்

**முன்னுரை:-**

**"வைகறை போல் தோற்றம்; திங்களைப் போல் அழகு;**
**ஞாயிறு போல் ஒளி;"**

'அமைதியின் மன்னன்', 'வியத்தகு ஆலோசகன்' என்ற பெயர்களைத் தாங்கி நீதியோடு உலகை ஆளவந்த 'உலகநாயகன்' இயேசு கிறிஸ்துவைப் பெற்றெடுத்த நம் தாய் அன்னை மரியா இறைவன் வரைந்த ஓவியமாகவும், தூய ஆவியாரின் துணையைப் பெற்றவராகவும் திகழ்கிறாள். அன்னையின் பண்புகளைத் தம் இலக்கியங்களில் எடுத்துரைத்த கவிஞர்கள் பலர் உளர். அவர்களுள் தேசிய நல்லாசிரியராய், சிறந்த தமிழாசிரியராய் விளங்கிய கவிஞர். துரை. மாலிறையன் குறிப்பிடத்தக்கவர். அவர் தாம் இயற்றிய 'அருள்நிறை மரியம்மை' என்னும் காவியத்தில் அன்னையின் பண்புகளை நயம்பட உணர்த்துகிறார் அவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

**அன்னையின் பிறப்பு :**

**"மரியாவே! அன்பே! எங்கள் மனம்கமழ் கின்ற பூவே!**
**விரியாநல் ஒளிவி ளக்கே! வெற்றியின் மறைக்கு றிப்பே!**
**பெரியாளே! மழையில் லானா! பெருவையம் புரக்க வந்த நெறியாளே..."**

எனப் புகழப்படும் நம் தாய் அன்னை மரியா தாவீது அரசரின் வழிமரபில் எளிய குடும்பத்தில் வாழ்ந்த சுவக்கீன் - அன்னா என்ற தம்பதியருக்குக் கடவுளின் தனிப்பட்ட

அருளால் பாவமாசு அணுகாதவராய், சென்மப்பாவத்திற்கு உட்படாமல் 'அமல உற்பவியாக' பிறந்தார். மரியா என்றால் 'வழிகாட்டும் விண்மீன்' என்பது பொருள். இதையே கவிஞர் துரை. மாலிறையன் 'அருள்நிறை மரியம்மை' காவியத்தின் உருக்காட்சிக்காண்டத்தில் அன்னையின் பிறப்பினைக் கூறும்போது,

**"அரியதாய், மண்ணில் இன்பம் அளிப்பதாய், அன்பே எங்கும்**
**விரிவதாய்ப், புவிசி றக்க விழைவதாய்ப், போற்று தற்கும்**
**உரியதாய், மனிதன் மாண்பை உயர்த்துவ தாய், மண் தன்னைப்**
**பெரியதாய், மதிப்ப தற்கே பிறந்த(து)அத் தவத்தின் சேயே!"**

எனப் பெருமைப்படுத்துகிறார். இவ்வாறு அன்னை மரியாள் 'தாழ்வில்லா மக்களுக்கு நோய்மையை நீக்குகின்ற நோக்கத்தோடு' பிறந்ததாகக் கவிஞர் குறிப்பிடுகிறார். அன்னை மரியாவின் பண்பினை அழகாக எடுத்துரைக்கும் கவிஞர், வறியவர்களுக்கு அன்பினைக் காட்டுவதில் அன்னை மரியாள் வள்ளலைப் போல திகழ்வதாகக் கூறுகிறார்.

**அன்னையின் தாழ்ச்சி:**

அன்னை மரியாள் 'தாழ்ச்சியின் சிகரம்' என்று அழைக்கப்பட சிறந்த காரணங்கள் உண்டு. அன்னை மரியாள் தன் பாடலில், "அவர்தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்" என்பதன் மூலம் இறைவன் அவர் தம் தாழ்ச்சியைக் கண்ணோக்கினார் என்று கூறுகிறார். இன்னும் மேலாக இறைவனின் தூதர் கமரியேல் மரியாவின் இல்லம் வந்து கடவுளின் திருவுளத்தை அவரிடம் அறிவித்தபோது அதற்கு அவர் பணிந்து, 'இதோ ஆண்டவரின் அடிமை' என்று கடவுளின் திருவுளத்தை ஏற்றுக்கொண்டார் இதையே கவிஞர்,

**"உம் முன் நான் ஒன்றுமில்லை**
**வயல் புழு, தூசு போன்றவர் நான் உமக்கு**
**அடிமையாக ஆனேன் என் செயல் யாவும்**
**சீர்பெற நீர் துணை செய்வீர்"**

எனவும்,

**"நாவிலும் நெஞ்சினாலும் நாயகர் உம்மை அன்றிக்**
**கூவிலேன் ஐய யான்உம் கொத்தடி மையே ஆவேன்"**

எனவும் அன்னை மரியாள் தன்னையே தாழ்த்துவதாகக் கவிஞர் துரை. மாலிறையன் அழகாகப் பாடுகிறார்.

**அன்னையின் உதவி மனப்பான்மை :**

அன்னை மரியின் பகிர்வு, பிறரோடு இணைந்து வாழும் தன்மை, உதவும் மனப்பான்மை ஆகிய பண்புகள் போற்றுதற்கரியது. தான் கருவுற்றிருந்த நிலையிலும்,

எலிசபெத் கருத்தாங்கினார் என்று கபிரியேல் தூதர் அறிவித்த செய்தியைக் கேட்ட கன்னி மரியாள் எலிசபெத்தைச் சந்தித்து, அவருக்கு உதவ கல்லும், முள்ளும் நிறைந்த பாதை வழியே கோவேறு கழுதையில் பயணம் செய்து எலிசபெத் வீட்டை அடைந்தார். அங்கு எலிசபெத்தைக் கண்டு,

**"பூண் பணி எலிசபெத்தே புகழ் பெற வாழ்க"**

என மனதார வாழ்த்துகிறார். மரியா எலிசபெத்துடன் மூன்று மாதம் தங்கியிருந்து அவருக்குப் பணிவிடை செய்ததை,

**"நேயத்தின் உச்சிக் குப்போய் நிலைநின்ற மரியா உற்ற**
**தாயைப்போல் எலிச பெத்தைத் தாங்கினார்; அன்னவாறே**
**சேயைப்போல் செக்கரியசைச் சிறப்பித்து பேணி வந்தார்".**

எனக் கவிஞர் அழகாகக் கூறுகிறார்.

**ஆறுதல் அளிக்கும் அன்னை:**

ஆறுதல் அளிப்பது என்பது அன்னை மரியின் தனிப்பண்பு. துன்ப துயரத்தில் வருந்தும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் 'ஆறுதல் அன்னையாக' மரியன்னை திகழ்கிறாள். இயேசு பிறக்கும் பொழுது அன்னை மரியாவிற்கு விடுதியில் தங்க இடம் கிடைக்காமல் மாட்டுத்தொழுவத்தில் தங்க நேர்ந்ததை எண்ணி வருந்திய சூசைக்கு, ஆறுதல் அளிப்பவராக.

**"மாட்டுக்கும் ஆட்டுக் கும்செய் மண்தரைத் தொழுவத் தைத்தாம்**
**காட்டினார் இறைவர் என்றால் கருணையின் சிறப்பால் அன்றோ?**
**தோட்டத்தில் மரம்நட் டானோ தூயவன் ஆனால் நாம்ஏன்**
**வாட்டம்தான் கொள்ள வேண்டும் வருந்தாதீர்..."**

என ஆறுதல் அளிக்கிறார் அன்னை மரியாள்.

**அன்னையின் தாய்மை:**

இறையன்னை மரியா, கன்னியாக இருந்தபோதே தாய்மைப்பேறு அடைந்ததாக நற்செய்திகள் குறிப்பிடுகின்றன. தூய ஆவியாரின் வல்லமை நிழலிட்டதால், கன்னி மரியா இறைமகனைக் கருவில் தாங்கினார். பாவத்திலிருந்து மக்களை மீட்க வந்த இறைமகன் இயேசுவின் பிறப்பு அன்னை மரியாவிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

**"கனியே! கற்கண்டே! தேனே! கலையே! பொற்கவியே! உற்ற**
**பனியே! நற்பணிவே! பாலே! அற்புதமே! சால்பே!**
**இனிய கற்பனையே! தூய்மை இலங்கும்நற் பதமே!"**

எனப் புகழும் அன்னை மரியாவின் தாய்மை உணர்வு இங்கு புலப்படுவதைக் காணலாம். கடவுளின் மீது கொண்ட மிகுந்த அன்பின் காரணமாக கடவுளின் திருவுளத்தை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துநாதருக்கும் நமக்கும் தாயானார். மேலும், கல்வாரியில் நம் மீட்பின் பணி ஒப்புக்கொடுக்கப்பட்ட பொழுது மரியன்னையின் தாய்மை அதன் உச்சநிலையை அடைந்தது. இவ்வாறு மனித மீட்பின் அலுவலில் தனது முழுமையான சம்மதத்தைக் கொடுத்து துயரங்களை ஏற்றுக்கொண்டு மனித குலத்தை ஆன்மீகத்தில் பெற்றெடுத்ததால் நமக்கு முற்றிலும் தாயானார்.

**அன்னையின் இறைவேண்டல் :**

அன்னை மரியாள் சிறு வயது முதலே கடவுளோடு இணைந்து வாழ்ந்தார். மரியா, யூதர்கள் வழக்கப்படி பன்னிரெண்டு ஆண்டுகள் ஆலயத்தில் தங்கி, வேதாகமக் கூடத்தில் பயின்று, திருவுடைகள் தயாரித்து, இறைவழிபாட்டில் பங்குபெற்றார். இறையுறவில் வளர்ந்து வந்த மரியா செபத்துடன் தனது வேலைகளைச் செய்தார். காப்பிய கவிஞரான துரை. மாலிறையன் மரியா வளர்ச்சிப் படலத்தில் அன்னை மரியாள் இறைவனிடம் வேண்டுவதாக நான்கு மன்றாட்டுகளைக் குறிப்பிடுகிறார் அவை :

**"கற்பெனும் திண்மை யாலே கன்னிமை காக்கவேண்டும்;**
**முற்படும் ஏழை மைக்கே முப்போதும் முயல வேண்டும்;**
**அற்பம்நான் முழுமு தல்முன் அடிமையாய் இருக்க வேண்டும்;**
**நற்புகர் ஆல யத்துள் நான்நிலைத் துயிர்க்க வேண்டும்".**

என்று வேண்டுகிறார். மேலும், இறைவனைக் கண்டுணர்வதற்கு ஏற்ற அறிவினைக் கொடுக்க வேண்டும் எனவும் வேண்டுகிறார். இவ்வாறு அன்னை மரியா தன் வாழ்க்கை முழுவதும் செபத்துடன் இறைவனோடு ஒன்றித்து வாழ்ந்தார்.

**முடிவுரை :**

உண்மையாக நாம் அன்னையின் பிள்ளைகள். ஆகவே, தாய்க்கு உகந்த பிள்ளைகளாக நடந்துகொள்வோம். சின்னஞ்சிறு குழந்தையைப் போல் தாயை நம்பி, தாய்க்கு முற்றும் கட்டுப்பட்டு, அவள் பராமரிப்பில் வாழ்வோம். எனவே, தூய இல்தேபோன்ஸ், **"மகனுக்கு அடிமையாக வேண்டுமென்று விரும்பி தாய்க்கு என்னைக் கையளித்தேன். கடவுளுக்கு நான் முற்றும் உரிமையான அவருக்கே நல்லூழியம் புரிய விரும்பி என்னை முழுவதும் அவர் தாய்க்கு உரிமையாக்கினேன்"** என்று அழகாகக் கூறுவதுபோல் நாமும் நம்மை முழுமையாக அன்னையிடம் கையளித்து இயேசுவோடும், அன்னை மரியாவோடும் வாழ்வோம், இறப்போம், உயிர்ப்போம்.

**- அ. ஆன்றோ ஆன்சி**
இரண்டாமாண்டு வணிகவியல்

# நட்பு நம் சொத்து

நட்பு என்பது சிப்பி போல
இவ்வுலகில் தூய்மை வாய்ந்தது
நட்பு என்பது கோவில் போல
நண்பர்கள் என்பவர் தெய்வங்கள் போல
பூக்களைப் பறிக்காதே நட்பைப் பிரிக்காதே
மொட்டாக இருக்கும்போது ஒற்றுமையாக இருப்பார்கள்
இதழாக விரியும் போது அழகாக இருப்பார்கள்
மரத்திற்குப் பலம் வேர்
யானைக்குப் பலம் தும்பிக்கை
நட்புக்குப் பலம் நண்பர்கள்
இருட்டில் கிடக்கும் ஒருவனை - வெளிச்சத்திற்குக்
கொண்டு வருவதே நட்பு
நட்பு என்பது ஆலமரம் போல -
அதன் விழுதுகள் நண்பர்கள் போல
மகிழ்ச்சியாக இருப்பது மட்டும் நட்பின் தன்மை அல்ல
தவறுகளைச் சுட்டிகாட்டுவது நட்பு ஆகும்
என்றென்றும் நட்பு வாழ வேண்டும்.

**- மே. ஸ்ரீதேவி**
முதலாமாண்டு பொருளாதாரம்

# மறவா நட்பின் காலங்கள்

அழுகுரலுடன் பள்ளிக்கு வந்த முதல் நாளில்
அன்று உன்னையும் அதே அழுகையுடன் பார்த்தேன்!
முதலாம் வகுப்பில் என் அருகில் அமர்ந்த நீ
நாட்கள் கடந்து போகையில் என்னை நேசிக்கத் தொடங்கினாய்.

நாம் பள்ளி வகுப்புகளில் அடித்த லூட்டிகளுக்கு
ஆசிரியர் தரும் தண்டனைகளை மகிழ்ச்சியுடன்
ஏற்று சேர்ந்தே சென்றோம்.
என் அனைத்து தேவைகளையும் நீ உணர்ந்து
எனக்காக அதைச் செய்தாய். நான் பள்ளிக்கு
வரவில்லை என்றால் அன்று பள்ளி முடிந்தவுடன்

நீ என் வீட்டில் இருப்பாய்!
மழையில் நாம் ஆட்டம் போட்ட நாட்கள்
என் நினைவை விட்டு என்றும் நீக்க முடியாது
நாட்கள் கடந்து நம் பள்ளி வாழ்க்கை முடிவுக்கு வந்தது
ஆனால் நாம் நட்பு இன்னும் முடியவில்லை
தினமும் மாலை உன் அழைப்பிற்காகக் காத்திருப்பேன்
உன்னுடன் பேசும் அந்த நிமிடங்களை நான்
என் கவலைகளை மறந்து விடுகிறேன்
உன் நினைவாலும் நம் நட்பின் நினைவாலும்
என்றும் அந்த நாட்களை மறக்கமாட்டேன்

**- ஷாலினி**
முதலாமாண்டு பொருளாதாரம்

## சமர்ப்பணம்

கருவறையைக் கல்லறையாக்கிய தாய்மார்களுக்கு
இக்கவிதை ஓர் சமர்ப்பணம்!

கருவாய் உருகொடுத்தவளே
என்னைக் கழுவி தூக்கி
எறிய துணிந்தாள்,
பலரின் வற்புறுத்தலால் நீயும் என்னை
வேண்டாம் என்றாயே ஏன்?
என் சின்ன இதயம் எப்போது
தன் துடிப்பை நிறுத்தும் என
நீ துடித்தாய் ஏன்?
என்னை அனுப்பியவரிடம் நான்
கூக்குரலிட்டேன்! ஆசைப்பட்டது தான்
என் தவறோ என்ற?
நியாயமான என் குரலுக்கு
செவிமடுத்து கருக்கலைப்பு
செய்த பின்னும், அங்கு நான் வளர
இடமளித்தார். நானும் அங்கு வளர்ந்தேன்.
நான் பிறக்கும் தருணமோ அனைவரும்
ஆண்பிள்ளை என்னும் எதிர்ப்பார்ப்பில்

ஆழ்ந்தனர். ஆனால் எதிர்பார்ப்போ
ஏமாற்றத்தில் முடிந்தது.
சமுதாயமோ! பெண் பிள்ளையா
ஐயோ சாபம்!
பிறவிப் பாவம் என்றது ஏன்?
நெல்மணிக்கும் கள்ளிப்பாலுக்கும்
இரையாக்காமல்,
தாய்ப்பாலையே தரத் துணிந்தாய்,
முள்ளாய் இருந்த என்னை
முடக்கிவிடாமல்,
முகவரி இல்லா கடிதத்தை
முழுக்கவிதையாக்க,
'கலை' என்னும் விதையை என்னுள்
விதைத்தாய்,
வரம் கேட்டு வந்த என்னைக்
கல்லறையில் வைக்காமல்,
உன் கருவறையில் உருவாக்கி
உலகிற்குப் பரிசாக்கினாய்...

தாயே உனக்கே இக்கவிதை
சமர்ப்பணம்!

**- அ. கிறிஸ்டலின் டாப்பினி**
முதலாமாண்டு பொருளாதாரம்

## புரியாத பாசம்

அன்று,
அதிகாலை விழித்துக்கொள்
உன் வேலையை நீயே செய்
என்று கூறியவை எல்லாம்
வேப்பங்காயாய்க் கசந்தது.

நாவிற்கு ருசியாய்
சமைத்துப் போட்டபோது
அதிலும் குறைகூறி
அவளின் தன்னலமில்லா
உழைப்பைக் கேலி செய்தது
சிலசமயம் ஆசையாய்
வந்த பேசிய போது
தொலைபேசியிலும்,

மடிக்கணினியிலும் மூழ்கி
அவளின் அன்பை
அசட்டை செய்தது.

இன்று,

மனம் ஏங்கித் தவியாய்த் தவிக்கிறது.
வெளியில் செல்லுகையில்
"பாத்து போய்ட்டு வா மா"
என்னும் குரலைக் கேட்க

சாப்பாடு போதும் எனச் சொல்லுகையில்
"எனக்காகக் கொஞ்சம் சாப்பிடும்மா"
என்னும் கொஞ்சம் மற்றும் கெஞ்சலான
வார்த்தைகளைக் கேட்க...

காலையில் கோபமாய்
கத்திச் சென்றதற்காய்,
மாலையில் வீடு திரும்புகையில்
பிடித்த பொருளை வாங்கிவந்து
"சாரிம்மா" என்னும்
சமாதானக் குரலைக் கேட்க.

கண்விழித்தது முதல் உறங்கும்வரை
அவள் என்னைத் திட்டிய
வார்த்தைகள் அனைத்திலும்
என்மீதான நேசம் ஒளிந்திருந்தது
இப்போதல்லவா புரிகிறது...

அவளின் அன்பிலும்,
அணைப்பிலும் அரவணைப்பிலும்
தரும் ஒற்றை முத்தத்திலும்
மனஅழுத்தம், சோர்வு,
துன்பங்கள், துயரங்கள்
அனைத்தும் நொடியில்
சிட்டாய்ப் பறந்தனவே...

அம்மா... விடுமுறை வராதா விடுதியை நீங்கி உன்னைக் காண?
உண்மை தான்,
புரியாத பாசம் பிரியும் போது புரிகிறது.

**- ச. ராஜேஸ்வரி**
முதலாமாண்டு பொருளாதாரம்

## கழிவுகளிலிருந்து கனவுகளுக்குள்...

குப்பைக் கூளங்களைக் கூட்டிப் பெருக்குகிறோம்
எங்கள் வாழ்வின் வளம் மட்டும் பெருகுவதாயில்லை...
'தூய்மை இந்தியா' வைப் படைக்கும்
'ஸ்வச் பாரத்' பாதையின்
உன்னத போராளி நாங்கள்!
முக்கியப் போராட்டம் எங்களுடையதே!
ஆனால், எம் வறுமை போராட்டம் ஓயவேயில்லை...

குன்றின் மேலிட்ட விளக்காய்
உலகஅரங்கில் இந்தியா ஔிர
எடுக்கும் பெருவெள்ள முயற்சியில்
சிறுதுளியாய் எங்கள் பங்கிருந்தாலும்
ஏனோ எங்கள் வாழ்வில்
ஒளி படரவே இல்லை...

நாற்றத்தைக் கடந்தால் மூக்கைப் பொத்துகிறீர்
நாற்றத்திலேயே கடக்கிறோம் வாழ்க்கையை...

பழைய சோற்றைப் பஞ்சாமிர்தமாய்
கந்தல் துணியைக் கண்களில் ஒத்தி
வாங்கும் என் குழந்தையை
அச்சத்துடன் நோக்கினேன்.

"இக்குறுகிய கும்மிருட்டு வட்டத்தில்
என் வாழ்வு மடியப் போவது போல்
இவளுக்கும் நேருமோ?"

என் மனதை வாசித்த அவள்
அழுத்தமாய்ச் சொன்னாள்...

ஒருவாய் சோற்றுக்கும்
அடுத்தவேளை கஞ்சிக்கும்
அல்லல்படும்
உன் திண்டாட்டம்
தெரியுமப்பா எனக்கு...
அப்போதும் நான்

வெற்றிப்படிக்கட்டில் முன்னேற
வழிகள் சிந்திக்கிறாய்
உன் கைரட்சை பட்டுக் கிடைக்கும்
யாவும் எனக்கு அமிர்தமே!
முயற்சியை மூலதனமாக்கி
சோதனையைச் சாகடித்து
சாதனை புரிவேன்!
வீறுகொண்டு எழுந்தாள்.
வருடங்கள் கடந்தன.
"அரசு பள்ளியில் படித்து
மாநில அளவில் முதலிடம்!
துப்புரவு தொழிலாளியின்
மகள் சாதனை!"

தலைப்புச் செய்தி நாளிதழை அலங்கரித்தது
வீடெங்கும் நிருபர்கள் கூட்டம்
எங்கு நோக்கினும் வாழ்த்துச் செய்தி
மேற்படிப்பை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்
பல இதயங்கள் முன்வந்தன.

இனி என் தலைமுறை நாற்றத்தில் சாகவேண்டியதில்லை
"குப்பையில் கிடந்த ரத்தினமன்றோ", என் பெண்!!
பெருமிதம் எனக்குள்!
விவரிக்க வார்த்தையின்றி
பேச்சிழந்து அவ்விடத்தை
விட்டு அகன்றேன்!

**- ச. ராஜேஸ்வரி**
முதலாமாண்டு பொருளாதாரம்

## நினைவே ஒரு சங்கீதம்

தன் வேலைகளெல்லாம் ஒரு வழியாக முடித்துவிட்டு, படுக்கை அறைக்குள் சென்றாள் போர்வையின் கதகதப்பில் மீண்டும் பழைய நினைவுகள்.

"பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண்ணைப் பெற்ற ரஞ்சிதாவை மேடைக்கு அழைக்கிறோம்" என குரல் கேட்க... உடல் சிலிர்க்க, பூரிப்புடன்

மேடைக்குச் சென்றாள்... ஆனால் அந்தச் சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை... ஆரவாரத்தோடு பார்க்க வந்தாள் பெருமையடைந்த நிமிடத்தைப் பகிர்ந்து கொள்ள ஆனால் தன் பெற்றோர்கள் இருவருமே சடலமாகக் கிடந்தனர். அதைக் கண்டு தன் விருதும் சடலமாகிப் போனது. சில நாட்கள் கடக்க...

எந்த வேலையால் தன் பெற்றோர்களை இழந்தாளோ அதே வேலைக்குச் சென்றாள் (கல் குவாரியில்).

தினமும் காலையில் வேலைக்குச் செல்லும் வழியில், கண்களில் நீர்வழிய, தான் படித்த பள்ளியை ஏக்கமுடன் நோக்குவாள். சில நாட்கள் சென்றன...

ஒரு நாள் ரஞ்சிதாவின் ஆசிரியர் அவளின் அவல நிலையைக் கண்டு வருந்தினார் ‘என்ன ரஞ்சிதா’ எனக் கேட்க ‘எல்லாம் விதி’ என்றாள்.

நாட்கள் நகராமல் நரகமாய் மெல்ல நடந்தன... திடீரென்று ஒரு நாள், கல்குவாரி முதலாளி ரூபாய் ஒரு லட்சம் தந்தார். என்னவென்றே புரியவில்லை ரஞ்சிதாவுக்கு, பின்பு தான் தெரியவந்தது “தன் பெற்றோர்கள் மாதம் மாதம் கொஞ்சம் சம்பளத்தை மட்டுமே எடுத்துக்கொண்டு மீதி பணம் முதலாளியிடமே இருந்தது”.

சமயத்தில் ரஞ்சிதாவுக்கு உதவும் என நினைத்து அவரிடம் கொடுத்து வைத்திருந்தனர்.

உள்உணர்வு முன்பே சொல்லிருக்கும் போல்... கைகளில் பணத்தோடு தன் பெற்றோர்களின் படத்தின் முன் கதறி அழுதாள் ரஞ்சிதா...

சிறிய இடைவெளிக்குப் பின் மீண்டும் தன் பள்ளிப்படிப்பைத் தொடங்கினாள்... மீண்டும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண்ணைப் பெற்று... (ஸ்காலர்ஷிப்) மூலம் மேல் படிப்பினை முடித்து... லண்டனில் முனைவர் பட்டம் பெற்று, தன் மனதிற்கு பிடித்த ஒருவனைக் காதலித்து திருமணம் செய்துகொண்டாள். அவளுக்கு எல்லாச் சூழ்நிலைகளிலும் உறுதுணையாக இருந்தார் ரஞ்சிதாவின் கணவர். நிழல்களையெல்லாம் நிஜமாகக் கருதாமல் அன்றாட வாழ்வையே நிரந்தரமாகக் கருதி தாய்மையைப் போற்றினாள் ரஞ்சிதா. பழைய நினைவுகள் சங்கீதமாய் ஒலிக்க... மெல்ல உறங்க தொடங்கினாள்.

பெண்மையைப் போற்றுவோம்!

**- அ. கிறிஸ்டலின் டாப்பினி**

முதலாமாண்டு பொருளாதாரம்

## தோழனின் தேடல்...

தாய் மட்டுமல்ல
        உன் எதிர்பார்ப்பை
உடனே அறிந்து கொள்வது
        உன் நண்பனுந்தான்...
உன் குறைகளை
        உன்னில் தேடி
        உன்னிடம் கூறும்
நல்ல நண்பனைத் தேடு...
        அவன் நீ துவண்டால்
        தூக்கி விடுவான்
உயர்ந்தால் ஆனந்த
        தாண்டவமாடுவான்...
துயரங்கள் சூழ்ந்தாலும்
        காயங்கள் பட்டாலும்
        அவமானங்கள் ஏற்பட்டாலும்

    மறந்து உயர
        பறக்க வேண்டுமா
    நல்ல நண்பனைத்தேடு...
        அப்போதுதான்
முழுமைபெறும்
        உன் வாழ்வு என்னும் கூடு
    கல்வியில் வெற்றி பெற
        பல புத்தகங்களைத் தேடு
    வாழ்க்கையில் வெற்றி பெற
        ஒரு நண்பனையாவது
தேடு...

**- அ.செ.சுகந்தி**

முதலாமாண்டு பொருளாதாரம்

## தமிழ்

தமிழின் இனிமை அறிந்தேன்
        என் தாய் எனக்குக் கற்பித்தபோது...
நாவிற்குச் சுவை கிடைத்தது தேனால்
        மொழிக்குச் சுவை கிடைத்தது தமிழால்
தமிழின் இனிமை அறிந்தேன்
        அதன் அன்பு புரிந்தபோது...
தமிழே! நான் பெருமை கொண்டேன்
        நான் ஒரு தமிழனாகப் பிறந்ததற்கு
தமிழே! உனது இனிமை அறிந்தேன்
        நீ பிற மொழிகளின் பிறப்பிடமாய் இருந்ததனால்
தமிழே! நீ ஒரு மொழி
        உண்மையில் நீ பல சுவை மிகுந்த கனி
தமிழே! கவிதை என்ற சொல் அழகானது
        நீ இங்கு பிறந்ததனால்
தமிழே! நீ எங்கள் ஆன்மா
        அதை நாங்கள் வருணிக்கவும் வேண்டுமா!

தமிழே! உன் இனிமை அறிந்தேன்.
ஒரு மழலையில் சிரிப்பினிலே
தமிழே! உன் இனிமை அறிந்தேன்
கவிஞனின் வடிவம் புரிந்தபோது
வாழ்க தமிழ்! வளர்க வையகம்!
பழம் பெரும் தமிழ்நாடு
வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு.

## நட்பு

நான் உன்னை விட்டுப் பிரிந்தேன்
தேவையற்ற காரணத்திற்காக
பல நட்புகள் என்னைச் சுற்றி இருந்தாலும்
உன் நட்பிற்காக என் மனம் ஏங்கியது
இந்த நேரத்தில் உன்னோடு இருந்தால்
எப்படி இருக்கும் என்று கனவு கண்டேன்
அப்போதுதான் கனவு என்னும் சொல்லின்
அர்த்தம் தெரிந்தது கனவு கனவாக முடிந்தது
உன்னோடு பழகிய காலங்கள் சிறிது
ஆனால் அதில் நிறைந்துள்ள நினைவுகள் பெரிது
அந்த நினைவுகளை நினைத்து கொண்டே இருந்தேன்
அப்போது தோன்றிய கேள்வி
நினைவுகள் எல்லாம் முடிந்துவிட்டால்
என்ன செய்வேன் அதன் விடை?

**- கோ. ஹேமலதா**
முதலாமாண்டு கணினி பயன்பாட்டியல்

## தாய்...

கடல் அலைகள் மாறலாம்!
பச்சோந்தியின் நிறம் மாறலாம்! ஏன்
தன்னுடைய வாழ்க்கையில் பல மாற்றங்கள்
ஏற்படலாம்!
இவையெல்லாம் மாறினாலும் உன்னுடைய தாயின்
அன்பு மாறவே மாறாது!
என்றுமே அது குறையவே குறையாது!
நீ உன்னுடைய வாழ்க்கையைத் துவங்குவதற்கு முன்னால், உன்
தாயின் உள்ளத்தை நினைத்துப் பார்!!!
உன்னுடைய சுமைகளைச் சுமப்பதற்கு முன்னால், உன்

தாயின் வேதனைகளை நினைத்துப் பார்!!!
உன்னுடைய கனவுகளைக் காண்பதற்கு முன்னால், உன்
தாய் உனக்காகச் சிந்திய கண்ணீர்த்
துளிகளை நினைத்துப் பார்!!!
எவர் உன்னை வெறுத்தாலும் உன் தாய்
உன்னை வெறுக்க மாட்டாள்...
எவர் உன்னை அன்பு செய்ய மறந்தாலும், தாய் என்பவள்
உன் அன்பை மறக்கவும் மாட்டாள்... மறைக்கவும் மாட்டாள்...
அவள் அன்பை நேசி...
அவள் தியாகத்தை நேசி...

**- ஜெஸ்சி கேத்தலின்.ஏ**
முதலாமாண்டு வணிகவியல்

## என் அன்பு அம்மா

வாழும் தெய்வம் நீயே - என்னை
வாழ வைக்கும் தெய்வமும் நீயே
உன் கரம் பிடித்து, நான் எடுத்து வைத்த
ஒவ்வொரு அடிகளும் - என் வாழ்வின் வெற்றிச் சின்னங்கள்
என்னைச் சில நேரம் கடிந்து பேசுகிறாய் - கோபத்தில்
பிறகு என்னைச் சமாதானம் செய்கிறாய் - பாசத்தில்
நீ சமைக்கும் உணவில் சுவை மிகுதி
ஏன் என்றால் அதில் உன் அன்பு மிகுதி
கடவுள் எனக்குத் தந்த மிகச் சிறந்த வரம்,
உன் மகளாய் இந்த உலகில் பிறந்தது தான்
உன் மடியின் மீது உறங்கும் போது கிடைக்கும் நிம்மதி,
அந்த மதியின் மீது உறங்கினாலும் கிடைக்காது
காலங்களும் உலகமும் மாறிப் போனாலும் - உன்
அன்பை மாற்ற இயலாது.
உன் கடமைகளோடு, நான் செய்யும் தவறுக்கு நூறுமுறை
வழங்கினாள் மன்னிப்பு
எவ்வாறு உனக்குச் சிறிதும் இல்லை களைப்பு?
உன் அன்பிற்கு ஈடாய்க் கொடுக்க என்னிடம் எதுவும் இல்லை
என்னைத் தவிர...

**- அ.அமிஷா லீளியன் சான்ட்ரியா**
முதலாமாண்டு வேதியியல்

# நிறைவுரை

**முனைவர் திருமதி. ஆலிஸ் ஜோசப்**
தமிழ்த்துறைத் தலைவர்
ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி,
சென்னை - 600 086.

'ஸ்டெல்லா மாரிஸ் என்பது இலத்தின் வார்த்தை ஆங்கிலத்தில் 'Star of the Sea' என்றும், தமிழில் 'அலைகடல் விண்மீன்' என்றும் பொருள்படும்.

அலைகடல் விண்மீன்களாகத் திகழும் எம் மாணவியரின் படைப்பாற்றல் ஒளிர்விடும் விண்மீன்களே ஆகும்.

**அ**ன்புடன் தங்களின்
**ஆ**ர்வமிகு ஆற்றலுடன்
**இ**யற்கை தொடங்கி
**ஈ**டில்லா இறைவன்வரை
**உ**யரிய நோக்குடன்
**ஊ**க்கமது துணைகொண்டு
**எ**ண்ணங்களை வடிவமைத்து
**ஏ**ற்றமிகு கருத்துக்களுடன்
**ஐ**யமின்றி தெளிவுடன்
**ஒ**ப்பில்லா சிறப்புடன்
**ஓ**தலுடன் படைப்புகளை
**ஔ**டதமாக வழங்கிட்ட

எம் மாணவியர்க்கு வாழ்த்துக்கள்!

கவிஞர் மு. மேத்தா 'கண்ணீர்ப்பூக்கள்' என்னும் தனது கவிதை நூலில் 'செருப்புடன்' பேட்டி கண்டுள்ளார். எம் மாணவியர் கவிஞரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, 'அகல் விளக்குடன்', 'உப்புடன்', 'எறும்புடன்' பேட்டி கண்டுள்ளனர். மாணவியரின் பேட்டியினால், சிறப்பை எட்டியுள்ளன மேற்கண்டவை.

வாசகர்களே! மாணவியரின் படைப்புக்குள் நுழைந்திடுங்கள்! மாணவியரின் படைப்பாற்றலின் சிறப்பினை அனுபவித்திடுங்கள்! பல்வேறு தலைப்புகளில் பாங்குற படைத்திட்ட மாணவியர்களின் திறமை கண்டு வியந்திடுவீர்!

எம்மை எப்பொழுதும் ஊக்குவித்து வழிநடத்தும் எம் கல்லூரி முதல்வர் அருட்சகோதரி முனைவர் ரோசி ஜோசப் அவர்களுக்கும், செயலர் அருட்சகோதரி சூசன் அவர்களுக்கும் நன்றி!

'கல்லையும் சிலையாக்குபவர்' எம் மாணவியர். அவர்களுக்கு என் பாராட்டுகள்!

படைப்பாளர்களைப் படைத்திட்ட இறைவனுக்கு நன்றி!

'நல்லதோர் வீணை' என்னும் இதழுக்கு அணிந்துரை நல்கிய, இலயோலா கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் அ. டேனியல் அவர்களுக்கும் நன்றி!

அச்சிட்டு நூல் வடிவாக்கிய எமரால்டு அச்சகத்தாருக்கும் நன்றி!

| | | |
|---|---|---|
| உப்புடன் ஒரு பேட்டி | – | 28 |
| எறும்புடன் ஒரு பேட்டி | – | 30 |
| விவசாயி | – | 31 |
| பட்டாம்பூச்சி | – | 32 |
| நினைவில் நின்றாய்... | – | 32 |
| இரு மீன்களின் கதை... | – | 33 |
| நெருப்பு, சிவப்பு ரோஜாவின் பரிசு | – | 34 |
| ஊக்கமே உயர்வு | – | 35 |
| பேனா முனை | – | 35 |
| யாசகம் | – | 36 |
| ஓட்டம் | – | 36 |
| தோல்வி | – | 36 |
| வீறுகொண்ட நெஞ்சினால்... | – | 37 |
| விவசாயிகளின் ஓசைகள் | – | 38 |
| உன்னை நேசிக்கும் உன்னால் துரத்தப்படும் பூனை | – | 38 |
| மழை | – | 39 |
| அம்மா | – | 40 |
| கயல்விழியின் கண் திறந்த கல்வி | – | 40 |
| இயற்கை ஆறு | – | 42 |
| இலக்கியத்தில் அன்னை மரியாள் | – | 42 |
| நட்பு நம் சொத்து | – | 46 |
| மறவா நட்பின் காலங்கள் | – | 46 |
| சமர்ப்பணம் | – | 47 |
| புரியாத பாசம் | – | 48 |
| கழிவுகளிலிருந்து கனவுகளுக்குள்... | – | 50 |
| நினைவே ஒரு சங்கீதம் | – | 51 |
| தோழனின் தேடல்... | – | 53 |
| தமிழ் | – | 53 |
| நட்பு | – | 54 |
| தாய்... | – | 54 |
| என் அன்பு அம்மா | – | 55 |
| நிறைவுரை | – | 56 |



Blessed Mary of the Passion 1839 - 1904

# HELENE DE CHAPPOTIN

Foundress, Institute of the Franciscan Missionaries of Mary

Printed : Emerald Graphics, 97907 25669